குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பராபவ ஆண்டு தைத்திங்கள் 10—2—67 [இதழ்

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

நற்பதஞ்சேர் ஆரூரின்
ஞானப்ர காசனெந்தை
தற்பரனோர் ஞானவாள்
தந்தானே —சொற்பனத்தும்
காரார் மறலிஅயன்
கண்ணனுக்கும் அஞ்சேனே
யாராலும் என்செய்ய
லாம். (49)

ஆசிரியர் :-

வித்துவான்,

சோமசுந்தரத் தம்பிரான்

சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,

சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

“ஞானசம்பந்தம்”

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26 | 10–2–67 | இதழ் 3

உட்பொருள்

எண்		பக்கம்
1	முப்புரம் எரித்த முதல்வன் ...	121
2	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை ...	127
3	கரும்பும் தேனும் ...	134
4	சித்தாந்த வினாவிடை ...	137
5	‘அமுதிற்குத் தமிழென்று பேர்’ ...	142
6	தில்லைப் பெருங்கோயில் திருப்பணி ...	146
7	அப்பர் அருள் முரசு ...	150
8	தையல்நாயகி அந்தாதி	154
9	திருத்தொண்டர் வரலாறு ...	158
10	வேலூர் இலவச சித்த வைத்தியசாலை ...	162
11	தென்கிழக்காசியாவில் திருவாசகமணி ...	166
12	அரியும் கரியும் ...	170
13	நவசத்திகளின் வழிபாடு	172
14	செய்திகள் ...	174
15	எதிர்காலம் ...	181
16	Extract from the Visitor's Book 141, 145, 149,	
17	மதிப்புரை ...	169

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பராபவ - தை - 10—2—67 [இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

முப்புரம் எரித்த — முதல்வன்

'புராணம்' என்பதற்கு, 'பழைமை' என்பது பொருள். இது பழங்கதைக்குப் பெயராய் வழங்குவது இயல்பே. 'புராதனம்' என்பது, 'புராணம்' என்று ஆயிற்று என்பதும் உண்டு. எப்படியாயினும், 'புராணம்' என்பது பழைய கதையைக் குறித்தல் பொருந்துவதேயாகின்றது. என்றாலும், 'புராணம்' என்பது, எல்லாப் பழங்கதைகளையும் குறிப்பதில்லை. கடவுள் தொடர்பான கதைகளே, 'புராணம் என்று சொல்லப்படும்.

'புராணங்கள் பதினெட்டு' என்பது தொன்றுதொட்டு வரும் ஓர் வரையறை. இப் பதினெட்டும், பதினெட்டுப் பெருங்கதைகளாம். அதனால் இவை, 'மகாபுராணங்கள்' என்றும் சொல்லப்படும். இப் பெருங்கதைகளின் ஊடே பற்பல சிறு கதைகள் தொடர்பு கொண்டு விளங்கும். 'வேதத்தின் உண்மைப் பொருளை உணர்தற்குப் புராணங்கள் இன்றி யமையாதவை' என்பதும், 'அதனால், புராணங்கள் மிகச் சிறப்புடையன' என்பதும் ஆன்றோர் கொள்கை.

" சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால்,சைவத்
திறத்தடைவர்; இதிற்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர் "

என்பது சிவஞான சித்தி. திருஞானசம்பந்தர் மதுரையில் பாண்டியன்முன் சமணரை வாதில் வென்றபொழுது முடிவாக வையையாற்றில் எதிரேறுதற்குச் சைவத்தின் சிறந்த உண்மைகளை அருளிச்செய்த, " வாழ்க அந்தணர் " என்னும் திருப்பாசுரத் திருப்பதிகத்துள் புராணங்களின் பெருமையை வலியுறுத்துதற்கு,

" வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றேகலிக் கோவை சொல்லே "

என்ற ஒரு திருப்பாடலை அருளிச்செய்தார். இத் திருப்பாடலின் கருத்தை விளக்கியருளிய சேக்கிழார்,

" வேத முதல்வன் எனும்மெய்த் திருப்பாட் டினில்நேர்
ஆதி உலகோர் இடர்நீங்கிட ஏத்த லோடும்
பாத முதலாம் பதினெண் புராணங்கள் என்றே
ஓதென் றுரைசெய்தனர் யாவும் ஓதா துணர்ந்தோர் "

என்று அருளியது நோக்கற்பாலது. வேதங்களை எல்லாம் ஓதாதுணர்ந்த வேதவியாசர், புராணங்களை நந்திதேவர் மாணாக்கராகிய சனற்குமார முனிவரிடம் கேட்டுணர்ந்தார், என்பது வரலாறு. இதனாலும், புராணங்களின் பெருமை விளங்கும்.

புராண வரலாறுகளில் சில, உண்மை நிகழ்ச்சிகளின் விரிவாகவும், சில, தத்துவங்களை அடிப்படையாகக்கொண்டு

அவற்றை விளக்க எழுந்தனவாகவும் இருக்கும். பயன் கருதிக் கூறப்பட்டனவும் சிலவாம். இவற்றாலெல்லாம் கடவுள் நெறியின் மரபுகள் இவை என்பது புலனாகும்.

புராண வரலாறுகளுள் சில, மிகவும் பழைமை யுடையன. அவை சங்க இலக்கியங்களுள்ளும் காணப்படும். அவற்றுள் சிவபெருமான் முப்புரத்தை எரித்த வரலாறு ஒன்று. சங்க இலக்கியங்களுள்,

'' ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயி லுடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் ''

என்னும் புறநானூற்றுப் பகுதி, இவ் வரலாற்றை இனிது விளங்க விரித்துரைப்பது.

'' மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும் ''

என்றாற்போல்வன, (முருகு - 154.) இதனைச் சுருக்கமாகக் குறிப்பிடுவன. சிவபெருமான் முப்புரம் எரித்த வரலாறு பின்வருமாறு புராணங்களுட் கூறப்படும்.

'தாரகன்' * என்னும் அசுரன் புதல்வர் மூவர். அவர், தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்பவர்கள். இம் மூவரும் பிரமதேவனை நோக்கித் தவம் செய்து, 'பூமி, அந்தரம், சுவர்க்கம்' என்னும் மூன்றிடங்களிலும் முறையே இரும்பு, வெள்ளி, பொன் என்பவற்றாலாகிய கோட்டைகள் உண்டாகவும், அவை தாம் விரும்பிய இடத்திற்குப் பெயர்ந்து செல்லவும், மூவரும் ஒருங்குசேர்ந்து வரும்பொழுது சிவ பெருமானால் அழிவதன்றிப் பிறர் ஒருவராலும் அழியாத வலிமை யுடையவராய் வாழவும் வரம் பெற்று, அம் மூன்று கோட்டைகளிலும் வாழ்ந்துவந்தனர்.

இங்ஙனம் வாழுங்கால், முன்பு பிரமதேவன் சொல்லிய படி சிவபெருமானால் அழிவுவாராதிருக்க அப்பெருமானிடத்

** இவன் கந்த புராணத்துட் சொல்லப்படும் தாரகன் அல்லன் ; அவனினும் பழையவனாகச் சொல்லப்படுபவன்.*

தில் அன்புடையவர்களாய்ச் சிவபூசை செய்து, தமது மூன்று நகரங்களிலும் சிவநெறியே விளங்கச்செய்தனர். இஃது இவ்வாருயினும், அசுரத் தன்மையால், பெயர்ந்து செல்லக் கூடிய தங்கள் கோட்டைகளுடன் மால், அயன், இந்திரன் முதலிய தேவர் உலகங்களிலும், மற்றும் பல இடங்களிலும் சென்று பலரையும் அவர்கள் துன்புறுத்திவந்தனர். முப்புரத் தவர்களது கொடுமையைத் தாங்கமாட்டாத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட, அவர், 'திரிபுரத்தவர் தீமை செய்யினும், அவர்கள் நம்மை வழிபட்டு வருவதால், நாமே அவர்களை அழித்தல் கூடாது' என்று அருளிச்செய்தார்.

சிவபெருமானையன்றிப் பிறரால் அழியாத வரத்தைப் பெற்றுள்ள திரிபுரத்தவரை அழித்தல் எவ்வாறு எனச் சிந்தித்த திருமால், ஆதிபுத்தராகி, நாரத முனிவர் தம் மாணுக்கராய் உடன்வர, முப்புரத்தவரிடம் சென்று தாம் புதுவதாக உண்டாக்கிய 'பிடகாகமம்' என்னும் புத்த சமய நூலை அவர்கட்கு விளங்கக் கூறி, அவர்களையும், அவர்கள் நகரங்களில் வாழ்ந்த அனைவரையும் பௌத்தர்களாகச் செய் தார். அதனுல், முப்புரத்தவர் ஆட்சியில் சிவநெறி நீங்கப் புத்தசமயம் நிலைபெற்றது. இந்நிலையில், 'சுதன்மன், சுசிலன், சுபுத்தி' என்னும் மூவர்மாத்திரம், சிவபெருமானிடத்தில் பயன் கருதாத உண்மை அன்பை உடையவர்களாய், முன் போலவே சிவநெறியில் தவருது நின்றனர்.

முப்புரத்தில் சிவநெறியை நீக்கிப் பௌத்தத்தை விளங் கச் செய்தபின், திருமால் முதலிய தேவர் பலரும் மீண்டும் சிவபெருமானிடம் சென்று வணங்கித் திரிபுரத்தவர்கள் சிவநெறியை அழித்துப் பௌத்தர்களாய்விட்டமையைத் தெரிவித்துத் தங்கள் இன்னலைத் தீர்க்கவேண்டி இரந்து நின்றனர். சிவபெருமான், 'சிவநெறியை அழித்தவர்களை அழித்தல் பொருந்துவதே; ஆயினும், திரிபுரத்தவர்முன் சென்று போர்புரிதற்கு நம்மிடம் போர்க்கருவிகள் இல்லையே' என்ருர். அதுகேட்ட தேவர்கள் தாங்களே அவைகளை அமைத்துத் தருவதாகக் கூறி அவ்வாறு செய்தனர்.

உலகத்தின் அமைப்பே தேர் ஆயிற்று. பூமியே தேர்த் தட்டு; மந்தர மலையே அச்சு; சூரிய சந்திரரே சக்கரம்;

அட்ட குலாசலங்களே தூண்கள் ; கடல்களே தேர்ச் சீலை கள் ; நதிகளே கோடிகள் ; உபவேதம் முதலிய கலைகளே மணிகள் ; நான்கு வேதங்களே தேரிற் பூட்டும் குதிரைகள் ; வேதத்தை ஓதும் பிரமதேவனே தேரை ஓட்டும் சாரதி ; பிரணவமே அவன் கையில் உள்ள கோல்; தேவர் பலரும் மற்றும் பலப்பல உறுப்புக்கள். இவ்வாருயினபின், மேரு மலையையே வில்லாகவும், 'வாசுகி' என்னும் பாம்பையே நாணியாகவும் அமைத்து, கலைமகள் வில்லின் மணியாய் இருக்க, திருமால் அம்பும், அக்கினி அம்பின் முனையும், வாயு அம்பின் சிறகும் ஆகி, அனைத்தையும் சிவபிரானிடம் தெரி வித்தனர். அவர் போருக்கெழுந்து தேரின்மீது திருவடியை எடுத்து வைத்தபோது, அச்சு முரிந்தது.‡ உடனே திருமால் இடப உருவாய்த் தாங்க, சிவபெருமான் இடபாருடராய்த் தோன்றினுர்.

பின்பு, இது விநாயகரை வழிபடாமையால் வந்தது என்று, தேவர்கள் விநாயகரை வழிபட, அவரது அருளால் தேர் முன்போலவே நன்கு அமைந்தது. சிவபெருமான் அதன் மீதே சென்று திரிபுரத்தை அணுகினுர். தாரகாட்சன் முதலிய மூவரும் அகங்காரத்தால் தங்கள் வரத்தையும் மறந்து, தங்கள் மூன்று கோட்டைகளுடன் ஒன்று சேர்ந்து சிவபெரு மான்முன் வந்து போரேற்று நின்ருர்கள். சிவபெருமான், மகாமேரு மலையாகிய வில்லை வளைத்து, வாசுகியாகிய நாணியை ஏற்றி, திருமால் முதலிய மூவருமாக அமைந்த அம்பை அந்நாணியிற் பூட்டினுர். 'சிவபெருமான் ஆற்றல் எவ்வாறு இருப்பினும், திரிபுரத்தை அழிக்கப்போகின்றவர் கள் நாமே அன்ருே' என அம்பாய் இருந்த மூவரும் சிறிது பெருமிதத்துடன் நினைத்தார்கள். அதை அறிந்த சிவ பெருமான் திரிபுரத்தவர்களைப் பார்த்துக் கோபச் சிரிப்புச் சிரிப்பவரைப்போலச் சிறிது புன்னகை புரிந்தபோழுது, அந் நகைப்பினின்றும் எழுந்த தீயானது முப்புரத்தையும், தார காட்சன் முதலிய மூவரையும், மற்றும் அசுரர் அனைவரையும் எரித்து நீருக்கியது. ஆயினும், சுதன்மன் முதலிய மூவரும் தீங்கின்றிவந்துசிவபெருமானைவணங்க, அவர் அவருள் இரு

‡ அச்சு இற்ற இடம் அச்சிறுபாக்கமாயிற்று என்பர்.

வரை வாயில் காவலராகவும், ஒருவனைத் தம் நடனத்திற்கு மத்தளம் வாசிப்பவனாகவும் கொண்டு, தேவர்கள் மகிழ்ந்து செய்த தோத்திரங்களை ஏற்று அவர்களுக்கு விடைகொடுத்துத் தாம் கைலைக்கு எழுந்தருளினார். பின்பு திருமாலும், நாரதரும் தாங்கள் சிவநெறியாளர்க்குப் புத்த சமயத்தைப் போதித்துப் பௌத்தராக்கியதனால் வந்த பாவத்தைச் சிவபூசை செய்து நீக்கிக்கொண்டனர். இதனால், 'சிவபெருமான், தான் செய்பவராய் இருந்து, ஏனையோர் பலரையும் கருவியாகக் கொண்டு காரியங்களை நிகழ்த்துகின்றார்' என்பதும், 'உலகில் எங்கு என்ன தீமைகள் நிகழ்ந்தாலும், அங்கு உள்ள சிவனடியார்களை அத்தீங்குகள் அணுகமாட்டா' என்பதும் தெளிவாகும். இங்குக் குறிக்கப்பட்ட சில நிகழ்ச்சிகளைக் கீழ்க்காணும் திருவாசகம் நன்கு எடுத்து விளக்குகின்றது.

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற ;
ஒன்றும் பெருமிகை உந்தீபற.

தச்சு விடுத்தலும் தாம்அடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற ;
அழிந்தன முப்புரம் உந்தீபற.

உய்யவல் லார்ஒரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே உந்தீபற ;
இளமுலை பங்கனென் றுந்தீபற.

தேவாரத்திலும்,

"மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க் கருள்செய்தார்"

என்பது முதலிய பகுதிகள் காணத்தக்கன. "முப்புர மாவது மும்மல காரியம்" என்னும் திருமந்திரத் தொடர், 'இவ்வரலாற்றால் சிவபெருமான் பாச நீக்கம் செய்து ஞானத்தை அருள்பவன் என்னும் உண்மையை அறியலாகும்' என்கின்றது. சிவபெருமானது மறக்கருணை, அறக்கருணை இரண்டையும் ஒருங்கே இனிது விளக்கிநிற்பதுபற்றி, இப்பழம்பெரு வரலாறு திருமுறைகளிலும், மற்றும் பல இடங்களிலும் சிறந்தெடுத்துப் போற்றப்படுதல்கொண்டு, முப்புரம் எரித்த பெருமானது முதன்மையை உணர்ந்து போற்றி, இன்னல் நீங்கி இன்புறுவோமாக.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

உலகன்னை

காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போற்
கட்டுண் டிருந்தஎமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட் டதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவிளை அமுதம்ஊட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்டமைத்திட்
டேரிட்ட தன்சுருதி மொழிதப்பின் நமனைவிட்
டிடருற வுறுக்கிஇடர்தீர்த்
திரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டில்
இசைந்துதுயில் கொண்மின்என்று
சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே!
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

—*தாயுமானவர்.*

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது ஔவையார் வாக்கு. 'முன்னறி தெய்வம்' என்பது, 'கண்முன் காணப்படுகின்ற தெய்வம்' என்பதாம். 'கண்முன் காணப்படுகின்ற தெய்வம்' என்பதனால், 'இவ்வாறு கண்முன் காணப்படாத தெய்வமும் ஒன்று இருக்கின்றது' என்பது தெளிவாகும். இன்னும் 'முன் அறி தெய்வம்' என்பதனால், 'பின் அறி தெய்வமும் ஒன்று உள்ளது' என்பது புலனாகும்.

ஆகவே, 'மக்களுக்குக் கண்முன்னே முதலில் காணப்படும் தெய்வங்களாகக் காட்சியளிக்கின்ற அன்னையும் பிதாவும் போலத்தான், கண்முன் தோன்ருது மறைந்துநின்று பின்பு காணப்படும் நிலையில் உள்ள தெய்வமும் இருக்கின்றது' என்னும் உண்மையையும் ஒளவையார் முன்சொன்ன வாக்கியத்தில் குறிப்பாக அருளியிருக்கின்ருர் என்பது புலனுகும்.

மக்களது தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், மற்றும் எவ்வகையான நலத்திற்கும் அன்னையும், பிதாவுமே முதல்வராய் இருப்பதுபோல, உயிர்களின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், மற்றும் எல்லா வகையான நலங்கட்கும் இறைவனே முதல்வனுய் இருக்கின்ருன். அன்னையும், பிதாவும் இருவர். ஆனல், இறைவன் ஒருவனேயன்ருே? அவன் எவ்வாறு உயிர்கட்கு அன்னையும் பிதாவுமாய் இருத்தல் கூடும் என்று ஐயுறலாம். 'இறைவன் ஒருவன்' என்பது உண்மையே. இறைவன், பொருளால் ஒன்ருயினும், 'சத்தி, சிவம்' என்னும் தன்மையால் இரண்டாய் இருக்கின்ருன். அஃது எவ்வாறு எனின், கதிரவன் (சூரியன்) ஒருவனே, 'தானும், தன்து கதிரும்' என இரு தன்மைப் பட்டிருத்தல் போலவாம்.

'கதிரவன் இப்பூமிக்கு எத்துணையோ கல் தொலைவிற்கு அப்பால் இருக்கின்ருன்' என்பதும், 'ஆயினும், அவனது கதிர் இப்பூமியில் படிந்து பொருள்களை விளக்குகின்றது' என்பதும் நாம் நன்கு அறிந்தவை. பூமியில் படிந்து பொருள்களை விளக்குகின்ற கதிர்களை, 'பூமியில் படியவில்லை; அஃது எங்கோதான் இருக்கின்றது' என்று சொல்ல முடியுமோ? முடியாது. ஆயினும் பூமியில் விழுகின்ற கதிர்களை, 'சூரியன்' என்ருே அல்லது சூரியன்தான் பூமியில் வந்துநின்று பொருள்களை விளக்குகின்ருன் என்ருே சொல்ல முடியுமோ? அதுவும் முடியாது. அதனல், 'கதிரவனும், அவன் கதிரும் ஒன்றுதான்' என்றும் சொல்வதற்கில்லை. 'கதிரவனும் கதிரும் இரண்டல்ல' என்பது யாவரும் நன்கறிந்தது, அதனல், 'இரண்டும் இரண்டு தனிப் பொருள்' என்றல் கூடாது. இவ்வாறு, பகலவன் ஒருவனே, 'தானும், தனது ஒளியும்' என இருதன்மைப்பட்டு நிற்றல் போலத்தான், இறைவன் ஒருவனே, 'தானும், தனது சத்தியும்' என இருதன்மைப்பட்டிருக்கின்ருன்,

சூரியன், பேரொளியாகிய ஆற்றல் உடையவனுய் இருப்பதனுல், அவன் எங்கும் வியாபிப்பதும், அவன் முன்னிலையில்

எத்தனையோ செயல்கள் நடைபெறுவதும் உண்டாகின்றன. அதுபோலத்தான், இறைவன் பேராற்றல் உடையவனாய் இருப்பதனால், அவன் எங்கும் வியாப்பிப்பதும், அவன் முன்னிலையில் எல்லாச் செயல்களும் நடைபெறுவதும் உண்டாகின்றன.

ஞாயிறு சடப்பொருள்; அதற்கு அறிவில்லை. அதனால், அதனது ஆற்றல் சடசத்தி. இறைவன் அறிவே வடிவானவன்; அதனால் அவனது சத்தி சிற்சத்தி. ஆகவே, ஞாயிறு, 'இவ்வுலகத்தில் இஃது இவ்வாறு நடைபெறவேண்டும்' என்று நினைப்பதில்லை. இறைவனே, 'இவ்வுலகில் இஃது இவ்வாறு நடைபெறுக' என்று சங்கற்பிக்கின்றான் (நினைக்கின்றான்). அவனது சங்கற்பத்திற்கு எதிராக மற்றொரு சங்கற்பம் இல்லாமையால், அவன் சங்கற்பித்தவாறே எல்லாம் நடைபெறுகின்றன. இங்ஙனம் சங்கற்ப மாத்திரையால் எல்லாவற்றையும் செய்யும் அவனது பேராற்றலே சத்தி. அச் சத்தியை ஆள்பவன் இறைவன். ஆள்பவனாதலின் இறைவனை, 'ஆண்' என்றும், அவன்வழி நிற்பதாகலின் சத்தியை, 'பெண்' என்றும் கூறுதல் மரபாயிற்று. ஆகவே, உலகத்திற்கு முதலாகிய சத்தியும் சிவமும், உலகம் முழுவதற்கும் அன்னையும், பிதாவும் ஆகின்றனர். இதனால் முன்னறி தெய்வமாகிய பெற்றோர் அம்மையும், அப்பனுமாய் இருத்தல்போலவே, பின்னறி தெய்வமாகிய கடவுளும், அம்மையும், அப்பனுமாய் இருத்தல் தெளிவாகின்றது. இந்த அம்மையப்பர் வடிவமே அர்த்த நாரீசுவர வடிவம்.

"அம்மையப்ப ரேஉலகுக் கம்மையப்பர்"

என்பது திருக்களிற்றுப்பாடியார். இறைவனை, "அப்பன் நீ, அம்மை நீ" என்கின்றார் திருநாவுக்கரசர். இவற்றால் உலகிற்கு 'அன்னையாய் இருப்பவனும் அவனே; தந்தையாய் இருப்பவனும் அவனே, அஃதாவது, சத்தியும், சிவமும் இருவரல்லர்; ஒருவரே' என்பது விளங்கும். இவ்வாறு இருக்கவும் சிலர், 'சத்திதான் முதல்' என்கின்றார்கள்; சிலர், 'சிவம்தான் முதல்' என்கின்றார்கள். இவர்களைக் கருதியே தாயுமானவர்,

"அன்னே அனேஎனும் சிலசமயம்; நின்னையே
ஐயாஐ யா என்னவே
அலறிடும் சில சமயம்"

என்று கூறுகின்றார். இம்முரண்பாடுகளெல்லாம்,

" சிவஞ்சத்தி தன்னை யீன்றும்
சத்திதான் சிவத்தை யீன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங்
குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிரம சாரி யாகும்;
பான்மொழி கன்னி யாகும்:
தவந்தரு ஞானத் தோர்க்கித்
தன்மைதான் தெரியு மன்றே "

(சிவஞானசித்தியார்,)

என்பது முதலியவற்றின் நுட்பங்களை உணரும்பொழுது நீங்கி விடும் என்பது அவரது கருத்து,

மக்களைப்பெற்று வளர்ப்பதில் தாயும், தந்தையும் ஒரு தன்மையானவர்களே. எனினும் தாய்க்குச் சிறிது ஏற்றம் உண்டு. அது, வயிற்றில் கருக்கொண்டு சுமந்து பெறுவதும், பெற்ற பின்னும் நீங்காது உடனிருந்து தன்பாலை ஊட்டி, கண்ணை இமை காப்பதுபோல் காத்து, வேண்டுவன யாவும் செய்வதும் போன்றவைதாம் அச்சிறப்பு. இதனால், தந்தை அன்பைவிடத் தாய் அன்பு சிறப்புடையதாய்க் காணப்படுகின்றது. தந்தை அன்பு சில சமயங்களில் வன்செயலாக வெளிப்படுவதும் உண்டு. தாய் அன்பு அவ்வாறில்லாமல் எப்பொழுதும் இன்செயலாகவே வெளிப்படும். இது பற்றியே இறைவனது கருணையைக் குறிப்பிடும் இடங்களில்,

" தாயிற் சிறந்த தயாவான தத்துவனே "

என்றும்,

" பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து "

என்றும் பெரியோர் கூறுகின்றனர். தாய் தந்தை இருவரையும் குறிப்பிடுமிடத்திலும் தாயை முன்னே குறிப்பிடுவதுதான் முறையாய் உள்ளது. " அம்மையே அப்பா ஒப்பிலா மணியே ' என்றுதான் திருவாசகமும் கூறுகின்றது. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதிலும் அன்னையைத்தான் ஔவை யாரும் முன்னே கூறியுள்ளார். தாய் தந்தை இருவரிலும் குழந்தை முன்னே அறிவது தாயைத்தானே ? ஞானசம்பந்தரும் திருத்தோணியப்பர் சிகரம்பார்த்து, ஈசர்கழல் முறைபுரிந்த

முன்உணர்வு மூள அழத் தொடங்கியபொழுதும், "அம்மே அப்பா" என்று, அம்மையைத்தான் முதலில் அழைத்தார். "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்" என்ற திருக் களிற்றுப்படியாரிலும், அம்மை முன்நிற்பதை முன்னே பார்த் தோம். இவ்வாறே தாயுமான அடிகளும் இறைவனை உலகன்னை வடிவான எந்தையே" என்று பாராட்டுகின்ற ஒரு பாடலே, முதலில் தரப்பட்டது.

அவர் பெயரே தாயுமானவர். தந்தையாய்மட்டும் இல்லா மல், தாயும் ஆன பெருமான் எழுந்தருளியுள்ள திருச்சிராப் பள்ளியில் அப்பெருமானது திருவருளால் தோன்றி அவனது பெயரையே பெற்று வளர்ந்து, அத்தலத்திலேயே மௌன குருவின் அருளால் ஞானம்பெற்று, சிரகிரியாகிய அம்மலையின் மேல் விளங்கும் தட்சிணாமூர்த்தியின் திருமுன்பில் பலநாள் நிட்டைகூடி இருந்தவர் அவர். அதனுல், 'சின்மயானந்த குரு' என்னும் தலைப்பில் பதினொரு பாடல்களை அவர் அருளிச் செய் தார். அவைகளில் ஒன்றே அப்பாடல்.

தாய் என்ன செய்கின்ருள்? முதலில் குழந்தையைப் பெறு கின்ருள். பின்னர் அணையாடை, தொட்டில் முதலிய பாது காப்பில் வைத்துப் பால் ஊட்டி வளர்க்கின்ருள்; சிறிது வளர்ந்தபொழுது வீட்டிலும், தெருவிலும் விளையாடவிட்டுப் பார்த்துக் களிக்கின்ருள். விளையாட விடும்பொழுது சில புத்தி மதிகளைச் சொல்லியனுப்பி, குழந்தை அதன்படி இல்லாமல் தவறு செய்யுமாயின், அச்சம் தரும் தோற்றத்தையுடைய யாரையேனும் கொண்டு அச்சுறுத்தவும் - சில சமயங்களில் சிறிது அடிக்கவும் செய்கின்ருள். அதனுல் அக்குழந்தை விளை யாடும் இடத்தைவிட்டுத் தன்னிடம் ஓடிவந்து அழும்பொழுது அதற்கு வேண்டுவன கொடுத்து அமைதி உண்டாக்கி உண வளித்து இன்பமாக உறங்கச் செய்கின்ருள். 'இறைவனும் உயிர்களை இப்படித்தான் வளர்க்கின்ருன்' என்று தாயுமானவர் விளக்குகின்ருர்.

உயிர்கள் அனுதியே ஆணவமலத்தால் கட்டுண்டு கிடக் கின்றன, கண்ணை மறைக்கும் இருள்போல, உயிர்களின் அறிவை அடியோடு மறைத்து நிற்கும் அக இருளே ஆணவமலம். ஆகவே, அந்நிலையில் உயிர்கள் இருள்செறிந்த கருப்பையில் அகப் பட்டுக் கண் திறவாது அறிவும் இல்லாதிருக்கின்ற குழந்தையைப்

போல்வனவாய் இருக்கும்' என்கின்றார் தாயுமானவர். இவ்வுபமானத்தால் இந்நிலை எவ்வளவு துன்பமானது என்பது விளங்கும். இத்துன்பநிலை 'கேவலம்' எனப்படும்.

நாம் எல்லோருமே இந்நிலையில் இருந்தவர்கள்தாம். அதனால், 'காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போற் கட்டுண்டிருந்த எமை' என்கின்றார். கார் - இருள். கருவறை - கருப்பை. இதுவும் இறைவனது வியாபகத்திற்குள்ளேயாகலின், இந்நிலையில் இறைவன் கருவைத் தாங்குகின்ற தாய் போன்றவனாகின்றான்.

ஆணவ மலத்தில் அழுந்தித் துன்பப்பட்டுக்கொண்டிருந்த உயிர்களுக்கு இறைவன் பற்பல உடம்புகளைக் கொடுத்துச் சிறிது அறிவை உண்டாக்கி உலகில் வரச்செய்தான். இதனை, 'வெளியில் விட்டு' என்று குறிப்பிடுகின்றார். இதுவே, தாய் குழந்தையைப் பெறுதல் போன்றது. பிறவியை அடைந்த உயிருக்கு உடம்பே பாதுகாவல். உடம்பை, 'அல்லல்' என்று சொல்லி, 'அல்லலாம் காப்பிட்டு' என்றார்.

அதற்கிசைந்த பேர், மக்கள், விலங்கு, பறவை முதலியன. தாய்தந்தையரும் குழந்தைக்குப் பெயர் இடுகின்றனரன்றோ! தாய் தந்தையர், பால் முதலிய உணவை ஊட்டுகின்றனர்; இறைவன் வினைப்பயனை ஊட்டுகின்றான் என்பதை 'வினை அமுதம் ஊட்டி' என்று கூறினார். வினைக்கீடாகப் பல உலகங்களில் சென்று பிறந்தும் இறந்தும் வருவதே உயிர்களாகிய குழந்தைகளின் விளையாட்டு; இதனைக் கண்டுகொண்டிருக்கிறான் இறைவன். அவன் சொல்லியவை வேதம் முதலிய உண்மை நூல்கள். அவற்றில் சொல்லப்பட்டபடி நடவாத பொழுது, 'யமன்' என்பவனை விட்டு அச்சுறுத்தி ஒறுக்கின்றான். இந்நிலை 'சகலம்' எனப்படும். அவ்வொறுப்பினால் திருந்திய பின்னர் பிறவியாகிய துன்பத்தை நீக்கி, இரவு பகல் அற்ற பேரின்பமாகிய வீட்டில் உயிர்களாகிய குழந்தைகளை இன்பமாக உறங்கச்செய்கின்றான். இந்நிலை, 'சுத்தம்' எனப்படும். இவ்வாறு இறைவன் உலகுயிர்கள் அனைத்திற்கும் அன்னையாகின்றான் என்பதை நிறுவுகின்றார் தாயுமானவர்.

இறைவன் தாய் மட்டும் அல்லன்; தந்தையுந்தானே? அதனால் 'சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே' என்று அழைத்துப்

பாராட்டுகின்றார். இங்குக் கூறிய முறையும், முத்தி நிலையும் சைவசித்தாந்தத்தின் உண்மைகளேயாதலும், இம்முறையில் இப்முத்தியை அருளுவது சிவபெருமானேயாதலும் பற்றி, 'சித்தாந்த முத்தி முதலே' என்றும் வரையறுத்து அருளினார். சித்தாந்தத்தின் விரிந்தபல கருத்துக்களை அழகான ஒரு முறையில் சுருக்கமாக இங்கு இவர் அருளியிருத்தல் வியத்தற்குரியது.

ஞான முதல்வனாகிய தட்சிணாமூர்த்தியிடம் விண்ணப்பிக்கின்ற இப்பகுதியில் இதன்பின் மற்றும் பல வகையில் அவர் விளக்கும் சித்தாந்தக் கருத்துக்கள் பல. 'ஆன்மாவாகிய செம்பில் ஆணவமாகிய களிம்பு நீங்க இறைவனாகிய இரசவாதி தனது அருளாகிய குளிகையைச் சேர்த்துப் பொன்னாக்குகிறான். ஆன்மாக்களின் அறிவை மறைப்பதும் அவன் அருள்; விளக்குவதும் அவன் அருள். அவனது அருளால் பெறும் முத்தி' உலகில் காணப்படும் எல்லா நிலைகளையும் கடந்த ஒன்று. அதைத் தருவது ஞானம் ஒன்றே. ஞானம் இல்லாமல் செய்கின்ற தானம், தவம், யாத்திரை முதலியன பயன்படமாட்டா. ஞானம் நிலைப்பதற்கு இறைவனது அருளைத்தான் துணையாகப் பற்றவேண்டும் என்பவற்றை எல்லாம் விரிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

தொடக்கத்தில் சனகாதி நால்வர்க்கு அருளிய நிலையை நினைந்து, அம்முனிவர்களைப்போலத் தம்மையும் ஆட்கொள்ளும்படி வேண்டினார் 'சனகாதியர் போன்ற ஞானிகள் அடைந்த பேரின்பத்தை யானும் அடைய விரும்புவது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதுபோல' என்கின்ற அவரது அருள் வேட்கை இங்கே காணப்படுகின்றது. 'என் உள்ளத்தில் பொறாமை, ஆசை முதலியவை இருப்பதால் நீ இருப்பதற்கு இடமில்லை என்றால், 'பரிபூரணன்' என்ற உனது பெயர் என்னாகும்' என்பதும், 'எல்லாவற்றையும் உண்டாக்கிய நீ நான் உன்னை அடைவதற்கு உரிய வழியை மாத்திரம் உண்டாக்கவில்லையோ' என்பதும் அவர் கூறும் சில நய உரைகள். 'உனது திருவருள் கிடைப்பதற்குமுன் இவ்வுலகில், நன்றாக உண்பது, உடுப்பது முதலியவை தாம் இன்பம் என்று நினைத்திருந்தேன்; உனது அருள்வந்து வாய்த்த உடன், இவைபற்றிய எண்ணங்கள் போனவழி தெரியவில்லை என்று அவர் கூறுவதிலிருந்து அவரது உண்மைநிலை இன்னதென்பது நன்கு விளங்குகின்றது.

இத் திருப்பாடல்களை ஓதி உணர்வார்க்குச் சித்தாந்த ஞானம் எளிதின் விளங்கிச் சித்தாந்த முத்தியும் கூடுவதாகும்.

கரும்பும் தேனும்

சி. அ.

இனிய பொருள்களில் கரும்பு முதலாகச் சொல்லப்படும். 'கரும்பு தின்னக் கூலி வேண்டுமா?' என்பது பழமொழி. 'கனியிருப்பக் காய்கவர்தல்' என்பதுபோல, 'கரும்பிருக்க இரும்பு கடித்தல்' என்பதும் ஒருபழமொழி. இவ் இருபழமொழிகளையுமே திருநாவுக்கரசர் தம் திருவாரூர்ப் பழமொழித் திருப்பதிகத்துள் எடுத்தருளிச் செய்கின்றார்.

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்
தாள்தொ ழாதே
உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி உழிதந்தென்
உள்ளம் விட்டுக்
கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ மயில்ஆலும்
ஆரு ரரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த
கள்வ னேனே.

மறுத்தான்ஓர் வல்லரக்கன் ஈரைந்து முடியினொடு
தாளும் தோளும்
இறுத்தானை எழில்முளரித் தவிசின்மிசை யிருந்தான்றன்
தலையில் ஒன்றை
அறுத்தானை ஆரூரில் அம்மானை ஆலாலம்
உண்டு கண்டம்
கறுத்தானைக் கருதாதே கரும்பிருக்க இரும்புகடித்து
எய்த்த வாறே.

கரும்பிற்கு அடுத்தபடி தேனைக் குறிப்பதும் வழக்கம். கண்ணகியைப் புதுமணம் செய்துகொண்ட கோவலன், காதல் மிகுதியால் அவளைக் காசறு விரையே "கரும்பே தேனே" என்று பாராட்டியதாக இளங்கோவடிகள் கூறுகின்றார். 'கரும்பினைக் கட்டிதனைக் கனியைத் தேனை" என்பது, இறைவனைப் பற்றி அப்பர் குறிப்பிடும் அரிய தொடர்.

கரும்பும் தேனும் இனிமையைத் தருவனவாயினும், கரும்பில் கோது உண்டு; தேனில் கோது இல்லை. தேன் முழுவதுமே சுவையாக நுகரத்தக்க பொருள். இந்த ஒரு நுட்பத்தைக் கொண்டு திருமூலர் ஓர் அரிய கருத்தை வெளியிடுகிறார்.

கரும்பும் தேனும் கலந்ததோர் காயத்தில்
அரும்பும் கந்தமும் ஆகிய ஆனந்தம்
விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்பும் கைத்தது; தேனும் புளித்ததே.

காயம் - உடம்பு. நமது உடம்பில் கரும்பும், தேனும்கலந்திருக்கின்றனவாம். கரும்பு எது? தேன் எது? கரும்பு உயிர்; தேன் சிவம்; ஏன்? கரும்பும்தேனும் இனிமையுடைய பொருள்கள் அதுபோல் ஆன்மாவும், சிவமும் அறிவுடைய பொருள்கள்; கரும்பு இனிமையுடையதாயினும் சுவையற்ற கோதும் உடையதாய் இருத்தல்போல, ஆன்மா அறிவுடையதாயினும், அறியாமையும்உடையதாய் இருக்கின்றது. தேன் இனிமையே வடிவமாய் இருப்பது போல, சிவமும் அறிவேவடிவமாய் இலங்குகின்றது. இவை இரண்டும் அறிவற்ற உடம்பில் கலந்து நிற்கின்றன. இதுதான் வியப்பு.

கரும்புபோல அறியாமையை உடையதாகிய உயிர், அந்த அறியாமையினின்றும் நீங்கித் தேன்போல உள்ள, சிவமாக வேண்டும்; அப்பொழுதுதான் அதற்கு ஆனந்தம் வாய்க்கும்.

'ஆனந்தம்' எனப்படுகின்ற இன்பம், சிவத்தினுடையது. சிவம் தன்னுள்ளே கலந்திருப்பினும் ஆன்மா தனது அறியாமையால் அந்த ஆனந்தத்தை அறிந்து அனுபவிக்க இயலாதிருக்கின்றது. அதனால், ஆன்மாவினிடத்தே பொருந்தியுள்ள சிவானந்தம் அரும்பிலே பொருந்தியுள்ள மணம்போல வெளிப்படாது அடங்கியிருக்கின்றது. பக்குவம் அடையாத ஆன்மா அரும்புபோன்றது; அதனால், அதனுள்ளே சிவானந்தம் இருப்பினும் அது வெளிப்பட்டுத் தோன்றுவதில்லை. பக்குவம் அடைந்த ஆன்மா மலர்போன்றது; அதனால், அதனுள்ளே சிவானந்தம் வெளிப்பட்டு விளங்கும்.

"தன்பருவ மலருக்கு மணமுண்டு வண்டுண்டு
தன்முகை தனக்குமுண்டோ!"

என்கிறார் தாயுமானவர். இதுவே "அரும்பும் கந்தமும் ஆகிய ஆனந்தம்" எனப்பட்டது.

அரும்பு நாளுக்குநாள் முதிர்ந்து போதாகி மலர்வதுபோல ஆன்மாவும் நாளுக்குநாள் பக்குவம் எய்தி அறிவுபெற்று விளங்கும். அப்பொழுது, மலரில் மணம்போலச் சிவானந்தம் வெளிப்பட்டு விளங்கும்.

"பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது"

என்று திருமூலரே மற்றோரிடத்தில் அருளிச் செய்கின்றார்.

அரும்பில் அடங்கியிருந்த மணம் மலரில் வெளிப்படுவது போல, ஆன்மாவில் அடங்கியுள்ள சிவானந்தம் பக்குவகாலத்தில் வெளிப்படும்பொழுது ஆன்மாவுக்கு மற்றைய இன்பங்களெல்லாம் இன்பமாய்த் தோன்றாமையால், அவைகளில் விருப்பஞ் செல்லாதொழியும்; சிவானந்தம் ஒன்றையே அது விரும்பி அனுபவித்திருக்கும் என்பதை,

"விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்பும் கைத்தது; தேனும் புளித்ததே"

என்று நயம்பட இத்திருமந்திரத்துள், அருளியுள்ளார். இவ்வாறே அருணகிரிநாதரும் தம் கந்தர் அலங்காரத்துள்,

"பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற
பேதைகொங்கை
விரும்பும் குமரனை மெய்யன்பி னால்மெல்ல
மெல்லஉள்க
அரும்பும் தனிப்பர மானந்தம் தித்தித்
தறிந்தஅன்றே
கரும்பும் துவர்த்துச்செந் தேனும் புளித்தறக்
கைத்ததுவே"

என்று கூறுவதைக் காண்கின்றோம். இவ்வாறு கரும்பும் தேனும் கலந்து வரும் திருப்பாடல்கள் நம் உள்ளம் புகுந்து இனிக்கும் இன்ப ஊற்றுக்கள் அல்லவோ!

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 26, இதழ் 1, பக்கம் 16இன் தொடர்ச்சி)

மாணாக்கன் : ஒன்றாய், சடமாய், அளவற்ற சத்திகளை யுடையதாய் உள்ள ஆணவமலம்; 'கேவலம், சகலம், சுத்தம்' என்னும் மூன்று நிலைகளிலும் ஒரே தன்மையாய்த்தான் இருக்குமோ?

ஆசிரியர் : இல்லை; வேறு வேறு தன்மையாய்த்தான் இருக்கும். கேவல நிலையில் மாயை, கன்மங்களின் செயற்பாடு இன்மையால், ஆணவமலம் அங்குத் தனது மறைத்தற் செயலைத் தடையின்றிச் செய்யும். அதனால், ஆன்மா கேவல நிலையில் தனது அறிவு, இச்சை, செயல் என்பவற்றில் ஒன்றும் ஒரு சிறிதும் நிகழப்பெறாது முழுமூடமாய்ச் சடப்பொருள்போலவே, தான் என்பது ஒரு பொருள் இருப்பதாகவே தோன்றாமல் ஆணவத்தில் மூழ்கிக் கிடக்கும். ஆகவே, அப்பொழுது ஆணவ மலத்தின் சத்தி, ஆவாரக சத்தியாய் - மறைத்தற் சத்தியாய் இருக்கும். இதுவே ஆணவத்தின் சொரூபம் அல்லது இயற்கைத் தன்மை.

சகல நிலையில், மாயை கன்மங்கள் செயற்படுவதால், ஆணவத்தினது சத்தி சிறிது அடங்கப்பெறும். அதனால், பருப் பொருள்களைக் காணும் காட்சியை மறையாது, நுண்பொருள் களைக் காணும் காட்சியை மட்டும் மறைத்துநிற்கும். நுண் பொருள்களைக் காணும் ஆற்றல் இன்மையால், பருப்பொருள் களின் இயல்பும் உள்ளவாறு விளங்காது; ஒன்று மற்றொன் றாகவே தோன்றும். அஃதாவது, நிலையாத பொருளே நிலைத்த பொருள்போலவும், இழிந்த பொருளே உயர்ந்த பொருள் போலவும், துன்பப்பொருளே இன்பப்பொருள் போலவும் மாறித்தோன்றும். இந்நிலை இருளில் இருந்தபொழுது ஒன்றை யுமே பார்க்க இயலாதிருந்த ஒருவனுக்கு, விளக்கு வந்த பொழுது பருப்பொருள்கள் விளங்க, நுண்பொருள்கள் விளங் காமலும், பொருள்களின் வண்ணமும், வடிவும் உள்ளவாறு

விளங்காமல் மாறித் தோன்றுதலும் உடைய நிலை போல்வதாம். இவ்வாறு பொருள்கள் மாறுபட்டுத் தோன்றுதல் அங்கும் இருளினால் விளைவதேயன்றி, விளக்கினால் விளைவதன்று, ஏனெனில், விளக்கு, பொருள்களை விளக்க வந்ததேயன்றி மறைக்கவந்தது அன்று; மறைப்பது எப்பொழுதும் இருளே. அது போலவே சகல நிலையில் மெய்யுணர்வு தோன்றாமல், விபரீத உணர்வு தோன்றுவதும் மாயை கன்மங்களால் விளைவதன்று; ஆணவத்தால் விளைவதே. ஆணவத்தின் சத்தி இவ்வாறு சகல நிலையில் விபரீத ஞானத்தை - மயக்க உணர்வை உண்டாக்குதலால், அப்பொழுது அதன் சத்தி 'அதோநியாமிகா சத்தி - கீழ்நோக்கிச் செலுத்தும் சத்தி' எனப்படும். இந்நிலை அதற்கு மாயை கன்மங்களின் சார்பால் வருதலின், இவ்வியல்பு அதற்குத் தடத்தமாம். இதனால், மாயை கன்மங்களின் சொரு பம் விளக்கும் தன்மை என்பதும் பெறப்படும்.

மாயையின் தன்மை விளக்குவதாயினும், ஆணவத்தின் மயக்குதல் தன்மைக்கு ஏதுவாதல்பற்றி மயக்கும் தன்மை யுடையதாகவும் கூறப்படும்.

> '' வைத்ததோர் மலமாய் மாயை
> மயக்கமும் செய்யு மன்றே ''

என்றதும் இதுபற்றி (சிவஞான சித்தி. சூ 2-53).

இனிச் சுத்த நிலையில் உயிர் இறைவன் திருவருளை நேரே பெற்று விளங்குவதால், அப்பேரொளியின் முன் ஆணவத்தின் மறைத்தற் சத்தியும், மாயை கன்மங்களது சிறு விளக்கச் சத்திகளும் சிறிதும் முனைத்து நிற்க மாட்டாது அடங்கிக் கிடக்கும். அதனால் அச்சத்திகள் அனைத்தும் அப்பொழுது அந்தர்ப்பாவித சத்தி அடங்கிக்கிடக்கும் சத்தியாய் விடுவனவாம். இஃது எது போலும் எனின், சூரிய ஒளி வருதற்கு முன்னே, இருளின் சத்தியும், விளக்கின் சத்தியும் புலப்பட்டு நின்று, 'சூரியஒளி வந்தபொழுது அவை அதன் முன்னர்த் தோன்றாது அடங்கி நிற்றல்போல்வதாம். சூரிய ஒளியின்முன் விளக்கொளி அடங்கிக் கிடக்கின்றதேயன்றி அழிந்தொழியவில்லை' என்பது எல்லார்க்கும் உடன்பாடு. 'அதுபோலவே, இருளும் சூரியன் முன் அடங்கிக் கிடக்கின்றதேயன்றி அழிந்தொழியவில்லை' என்பதும், 'அஃது, அச்சூரிய ஒளி உள்ளபொழுதும் பிற பொருள்களின் நிழல் தோன்றுவதாலும், அவ்வொளி மறைந்த உடன் முன்போலவே இருள்வந்து சூழ்தலாலும் அறியப்படும்'

என்பதும் சைவசித்தாந்தத்தின் துணிபு. எனவே, 'ஆணவம், கன்மம், மாயை' என்னும் மும்மலங்களும் என்றும் உள்ள பொருள்களேயன்றி, ஒருகாலத்து உள்ளனவாய்ப் பின்னொரு காலத்து இல்லாது அழிந்தொழிவன அல்ல. ஆகவே, அவை பெத்தத்தில் உள்ள ஆன்மாக்களைப் பற்றுவதும் முத்தியில் உள்ள ஆன்மாக்களைப் பற்றாமையுமாகிய வேறுபாடு மட்டிலே உடையனவாம் என்று அறிவாயாக. 'முத்தியில் இன்பம் கொடுத்தல் இறை; இத்தை விளைவித்தல் மலம்' என்று கூறிய உண்மை விளக்க நூலிற்கும், 'பெத்தத்தில் இறைவனது இன்பம் உயிரிடத்து விளையவொட்டாது தடுத்துநின்ற ஆணவ மலம், முத்தியில் அங்ஙனம் செய்யமாட்டாது வாளா இருக்கும்' என்பதே கருத்து. 'அங்ஙனமாயின் முத்திபெற்ற உயிர்களிடத்து ஆணவமலம் உண்டு என்பதற்குச் சான்று என்னை!' என்பவர்கட்கு விடையாகவே, 'முத்திபெற்ற உயிரை ஆணவ மலம் மறையாது விடினும், அதனைப் பெறாது பெத்தத்தில் நிற்கும் உயிர்களை மறைத்து நிற்றலே அஃது உண்மைக்குச் சான்றாம்' எனக் கூறுவர் மாபாடியம் உடையார் முதலாயினோர். ஆகவே, சுத்த நிலையில் ஆணவ மலத்தின் சத்தி அந்தர்ப் பாவித சத்தியாய்விடும் என்று உணர்வாயாக.

மாணாக்கன் : அடிகள் அருளிய யாவற்றையும் அடியேன் உணர்கின்றேன். ஆயினும் ஓர் ஐயம்; 'பெத்தம், முத்தி' என்பன ஆணவமலம் பற்றுதலும், பற்றாது ஒழிதலுந்தானே? அவ்வாறிருக்க, 'பெத்தம், முத்தி' என்பன அதற்குவேறாய் இருத்தல்போல வைத்து, 'பெத்தத்தில் ஆணவம் மறைக்கும்' என்றும், 'முத்தியில் அங்ஙனம் மறையாது' என்றும் கூறியது என்னையோ ?.

ஆசிரியர் : நீ வினவுவது உண்மையாக ஆய்ந்துணர வேண்டிய ஒன்றுதான். 'இறைவனைப்போல உயிர்களும் அறிவுடைய பொருளே' என்பதையும், 'ஆயினும், இறைவனது அறிவு சூக்கும அறிவு; உயிர்களினது அறிவு தூல அறிவு' என்பதையும், 'அதனால், அவ்வறிவு, பிறர் அறிவித்தாலன்றித் தானே ஒன்றை அறியமாட்டாது' என்பதையும் முன்பு பல இடங்களிற் கூறிவந்தோம். இனி, அறிவித்தால் அறிதலும் ஒருங்கே நிகழ்தல் இல்லை; அஃதாவது அறிவிப்பவர் எல்லாவற்றையும் ஒருங்கே அறிவித்தாலும், உயிரின் அறிவு அவற்றைச் சிறிது சிறிதாகப் பற்றியே அறியக்கூடியதாகும். அதனால், பலவற்றைப் பலகால் அறிவித்தபிறகே அவற்றை உயிர் அறிதற்கு உரியதாம். ஆகவே, எல்லாவற்றையும் ஒருங்கே அறிவித்தாலும் அறியமாட்டாது, ஒவ்வொன்றாகவே அறியும் தன்மை

உடையதாகிய உயிரை, ஒன்றையும் அறியவொட்டாது ஆணவ மலம் மறைத்துக்கொள்ளுதல் அனுதியே உளதாயிற்று. அங்ஙனம் ஆணவமலத்தால் மறைப்புண்ணுதற்கு உரியதாய் நின்ற அந்நிலையே, 'பெத்தம்' என்றும், பின் அம்மறைப்பினின்றும் நீங்கி. அறிவித்தவாறே அறியும் நிலை, 'முத்தி' என்றும் வழங்கப்படுகின்றன என்பது ஆழ்ந்து நோக்கி அறிந்துகொள்ளுதற்கு உரியதாம்.

மாணுக்கன் : அங்ஙனமாயின் அது நிற்க, எல்லா உயிர்களையும் ஒருங்கே மறைத்துக்கொண்ட ஆணவமலம், நீங்குங்காலத்து எல்லா உயிர்களினின்றும் ஒருங்கே நீங்காது, சில சில உயிர்களாகவே நீங்குதல் ஏன் ?

ஆசிரியர் : அதற்குக் காரணமும் முன்சொன்னதிலே அமைந்து கிடக்கின்றது. அஃதாவது, 'அறிவித்தால் அறியுமிடத்தும் ஒருங்கேயறியாது, சிறிது சிறிதாகவே அறிதல்' என்பது, எல்லா உயிர்கட்கும் பொதுவாய் உள்ளதொருதன்மை. ஆயினும், சிறிது சிறிதாய் அறிவதிலும், பலவேறு வகைப்பட முன்பின்னுய் அறிந்துவருதல் உயிர்தோறும் உள்ள சிறப்பியல்பாம். ஆகவே. 'அனுதியே ஆணவமலம் மறைத்து நிற்றல்' என்பது, எல்லா உயிர்களிடத்தும் பொதுவாக உளதாயினும், அம்மறைப்பு உயிர்தோறும் வேறு வேறு வகையாகவே இருக்கும். அவ்வெல்லா வகையும், 'தூலம், சூக்குமம், பரம்' என்னும் மூன்றுய் அமையும். 'பரம், அதிசூக்குமம்' என்பன ஒருபொருட் சொற்கள்.

ஆணவமலம், தூலமாய் வலிதாகப் பற்றிய உயிரை. பின் 'கன்மம், மாயை' என்னும் இருமலங்களும் வந்து பற்றும். அதனுல் அவை மும்மலம் உடைய உயிர்களாம். ஆணவமலம் தூலமாய் நில்லாது, சூக்குமமாய் மெலிதாகப் பற்றிய உயிரை, பின், கன்ம மலம் மாத்திரமே வந்து பற்றும். அதனுல், அவை, இருமலம் உடைய உயிர்களாம். இவ்வாறன்றி ஆணவமலம் தூலமும், சூக்குமமும் ஆகாது, அதிசூக்குமமாய் மிகவும் மெலிதாகப் பற்றிய உயிரை, பின்னர் எம்மலமும் வந்து சாராது; அதனுல், அவை, ஆணவம் ஒன்றையே கொண்டு ஒருமலம் உடைய உயிராம். ஒருமலம், இருமலம், மும்மலம் உடைய உயிர்கள், முறையே, 'விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்' என்னும் பெயரால் குறிக்கப்படும். 'கலை' என்றது, மாயை கன்மங்களை. எனவே, அவை இல்லாத உயிர்கள், 'அகலர் - கலையில்லாதவர்' எனப்படுகின்றனர். 'விஞ்ஞானகலர்' என்பதற்கு, 'விஞ்ஞானத்தால் - பேரறிவால் கலை நீங்கப்பெற்றவர்' என்பதும், 'பிரளா

யாகலர்' என்பதற்கு, 'பிரளயத்தில் கலை நீங்கப்பெற்றவர்' என்பதும், 'சகலர்' என்பதற்கு, 'கலையோடு கூடியவர்' என்பதும் பொருளாகும். விஞ்ஞானகலரும் பிரளயாகலருமாதல் இயற்கையாக முன்பே அமைதலும் உண்டு; செயற்கையாகப் பின்பு நிகழுதலும் உண்டு.

இவ்வாறு ஆணவமலம் அனாதியே எல்லா உயிர்களையும் ஒரு வகையாகவே மறையாது, பல்வேறு வகைப்பட மறைத்து நிற்றலால், நீங்குங் காலத்தும் பல்வேறு காலங்களிலே நீங்குவதாகும் என்று உணர்க. ஆணவமலத்தின் தன்மையை இவ்வாறு பலவகையிலும் ஆராய்ந்து அறிந்துகொள்க.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Shiyali.

"By the grace of Srí Chattanathaswami, I am enabled to have divine Dharsan of this very big temple. This is a world by itself. For the saivite world this is the centre to propagate சைவம் by having "திருஞானசம்பந்தர் பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவ" "I was very much impressed by the clean and pure upkeep of this institution. The Divine power has placed proper people at proper places to conduct its activities to the good of the world. I am indeed fortunate and recharged "my battery." I wish more people from Ceylon should come here and have His grace I feel very much thankful for all the kindness showed by the authorities. I long to come here again and spend at least some days. If the be broadcast by the * " " it will be a great boon for saivites in hearing part of the world. All Honor to Dharmapuram Mahasannidhanam.

(Sd.) K. N. Haran,

17—1—67. Editor, Eelanadu, Jaffna, Ceylon

'அமுதிற்குத் தமிழென்று பேர்'

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 26, இதழ் 2, பக்கம் 95 இன் தொடர்ச்சி)

"நற்றிணை நல்ல குறுந்தொகை"ப் பாட்டு வரிசையில் ஐந்தாவதாக நின்று அணிசெய்யும் நூல் ஓங்கு பரிபாடல். நூலின் அடைமொழியே உட்சிறப்பை விளக்கப் போதுமானது. பரிபாடல் என்ற பாவகையில் அமைந்த எழுபது பாடல்கள் இதன்கண் இருந்ததாக ஒருபாடல் பகர்கின்றது.

"திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் காடுகாட் கொன்று - மருவினிய
வையை இருபத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபடி பாடல் திறம்"

இன்று இதனுள் இருபத்திரண்டு பாடல்களே இருக்கின்றன. அவற்றுள் திருமாலுக்கு ஆறும், முருகனைக் குறித்து எட்டும். வையையைக் குறித்து எட்டும் அமைந்துள்ளன.

இப்பாடல்களைப் பாடிய பெருமைவாய்ந்த புலவர் பெருமக்கள் பதின்மூவர். நல்லந்துவனார், இளம்பெருவழுதியார், கடுவன் இளவெயினனார், கரும்பிள்ளைப் பூதனார், கீரந்தையார், குன்றம்பூதனார், கேசவனார், நற்பண்ணனார், நல்லச்சுதனார், நல்லழுசியார், நல்லெழுனியார், நல்வழுதியார், மையோடக் கோவனார் - ஆகியோர்.

ஆசிரியர் நல்லந்துவனாரின் பாடலிலே அம்பாவாடல் என்கிற தைந்நீராட்டு சிறப்பாகக் குறிக்கப் பெறுகிறது.

"விசும்பின் துளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது."

என்ற குறள் உணர்த்தும் உண்மையை நன்கு உணர்ந்தான் போல சேரன் செங்குட்டுவன்

"மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்" -

எனக் கூறுகிறான். நாடு மலிய மழை பெய்வான் வேண்டி நோற்கப்படும் நோன்பே மார்கழி நோன்பு. அவ்வழக்கம் பண்டே உண்டு என்பதனை இதோ பரிபாடல் காட்டுகிறது.

"வெம்பா தாக வியனில வரைப்பென
அம்பா வாடலின் ஆய்தொடிக் கன்னியர்"

கூட்டம் முனித்துறை முதல்வியர் முறைமை காட்ட, பனிப்புலர் பாடி பருமணல் அருவியின்கண் ஆடுவார்கள். பின்பு வையைக் கரையிலே தீவேட்கும் அந்தணர்கள் இருக்கையருகு சென்று அவ் எரியின் உதவியால் தம் ஈர அணியைப் புலர்த்திக்கொள்ளுகிறார்கள்.

காமக் குறிப்பில்லாத இந்த கன்னிமகளிர் முன்பு புலன்களடக்கித் தவம் செய்தமையாலா தாயர் அருகே நின்று தைந்நீராடும் பேறு பெற்றனர்? ஏ வையையே நீ சொல் - என்று வையையைப் பார்த்து வினா விடுக்கிறார் புலவர்.

"தீயெரிப் பாலுஞ் செறிதவமுன் பற்றியோ
தாயருகா நின்று தவத்தைந்நீ ராடுதல்
நீயுரைத்தி வையை நதி" (11 - பரிபாடல்)

காதலனையும் காதலியையும் இணைவிக்கும் வல்லமை படைத்த வையைப் புனலில்தான் எத்துணை, எத்துணை மலர்களைக் காட்டுகிறார் நல்வழுதியார். மல்லிகை மௌவல், மணங்கமழ் சண்பகம், அல்லி, கழுநீர், அரவிந்தம், ஆம்பல், குல்லை, வகுளம், குருக்கத்தி, பாதிரி, நல்லிணர் நாகம், நறவம்சுரபுன்னை - எல்லாம் கமழும் விறுசார் வையை - என்று புகழ்கிறார். மக்களுக்கு மகிழ்வை ஊட்டுகிற அவ்வையையை - இன்பம் கவினும் அவ்வழுங்கல் மூதூர்

"நன்பல நன்பல நன்பல வையை
நின்புகழ் கொள்ளாதிம் மலர்தலை உலகே"
(12 - பரிபாடல்)

என்று ஏத்தி வாழ்த்துப் பாடுகிறது.

திருமால் பற்றிவரும் ஆறுபாடல்களில் நல்வழுதியார் பாடியுள்ள பதின்மூன்றும் பாடல், அவருடைய கடவுட்பற்றைத் தெளியக் காட்டும். அதில் சில வரிகள் —

அடுபோரண்ணல் என்று விளித்து

"முந்தியாம் கூறிய ஐந்த னுள்ளும்
ஒன்றனிற் போற்றிய விசும்பு நீயே
இரண்டி னுணரும் வளியும் நீயே
மூன்றி னுணரும் தீயும் நீயே
நான்கி னுணரும் நீரும் நீயே
ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே" - (13 பரிபாடல்)

ஓசையால் அறியப்படும் ஆகாயமும், ஓசையாலும் பரிசத்தாலும் அறியப்படும் காற்றும், ஓசை, பரிசம், ஒளியால் அறியப்படும் தீயும், ஓசை, பரிசம், ஒளி, சுவை இவைகளால் அறியப்படும் நீரும், ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம் - இவற்ருல் உணரப் படும் நிலமும் - நீதான். ஆகவே மூலமும் அறனும் முதன்மையி னிகந்த காலமும், விசும்பும், காற்ருெடு, கனலும் கலந்த இம் மூவேழுலகத்து உயிர்களெல்லாம் நின்னிடத்தவாயின – என்று அழகொழுகப் பாடுகிருர்.

பதினேழாம் பாடல் செவ்வேளுக்குரியது. ஆசிரியர் நல்லழுசி யாரின் சிறுசெந்நா பரங்குன்றக் காட்சியை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது. மாறட்டான் குன்றத்தில் பாணர்களின் இனிய குரலுக்கெதிராக வண்டொலியும், குழலொலிக்கெதிர் தும்பியொலியும் எழும். ஒருபுறம் முழவு அதிர - அதனெதிராக அருவியின் இனிய முழக்கம் கேட்கும். ஒருபுறம் பாடல்நல் விறலியர் ஆட - மறுபுறம் வாடைக் காற்றில் பூங்கொடிகள் ஆடுகின்றன. பாடுமகளது பாலைப்பண் நிறைகுறையோடு ஒருபால் கேட்க - மறுபால் ஆடுமயிலினது அரிக்குரல் எழும். இப்படி கல்விப்புலமை கொண்டோர் மாறுமாறு எழுந்தாற் போன்ற காட்சியைத் திருப்பரங்குன்றிலே காணலாம்.

முருகனிடம் கேட்கும் வரங்கள் பலவிதம்.

"யாம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே"

— கடுவன் இளவெயினனர்.

"நன்றமு ராயமோ டொருங்குநின் னடியுறை
இன்றுபோல் இயைகெனப் பரவுதும்
ஒன்னார்த் தேய்த்த செல்வநிற் ருெழுதே"

—நல்லச்சுதனர்.

" நயத்தலிற் சிறந்தவெம் அடியுறை
பயத்தலிற் சிறக்க நாடொறும் பொலிந்தே."

— குன்றம்பூதனார்.

" பிணிமுகம் ஊர்ந்த வெல்போ ரிறைவ
பணியொரீஇ நின்புக ழேத்தி
அணிநெடுங் குன்றம் பாடுதும் தொழுதும்
அவை, யாமுமெம் சுற்றமும் பரவுதும்
ஏமவைகல் பெறுகயா மெனவே "

— நல்லழுசியார்.

இவ்வாறான எழில்நலம் பல பொதிந்த இன்தமிழ்ப் பெட்டகம் 'பரிபாடல்'.

(விரியும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

It is a pleasure to come to this Holy shrine and offer worship. We are thankful to the Mutt authorities for the nice arrangements made for our worship. This is one of the well maintained temples and the way in which it is managed reflects credit on the head of the Mutt.'

(Sd.) A. Alagiriswamy,
29—1—67
High Court Judge
Madras.

(Sd.) P. Chandra Reddy,
Vice Chancellor
Annamalai University
29—1—67.

தில்லைப் பெருங்கோயில் திருப்பணி

தில்லைப் பெருங்கோயில் திருப்பணிக் குழுவினர்.

நமது பாரத தேசத்திலும், சிறப்பாக நமது தமிழ்நாட்டிலும், புகழ்பெற்று விளங்கும் புண்ணியத் தலங்களுள், தலைசிறந்த ஒன்ருகத் திகழ்வது சிதம்பரம் என வழங்கும் தில்லைப் பதியாகும். சிதம்பரம் என்னும் இப்புனித தலத்தின் மாண்பும் மகிமையும் எல்லையற்றன. சைவ சமயத்தின் தலைசிறந்த பெருந்தலம் இதுவே யாகும். உலகமே பெரிதும் வியந்து போற்றும் சிறந்த கலை வடிவமாகத் திகழும் ஸ்ரீ நடராஜப் பெருமான் எழுந்தருளி விளங்கும் புண்ணியப் பெருந்தலம் இதுவே, என்பது அனைவரும் அறிந்தது. கோயில்கள் எத்தனையோ பல இருப்பினும், சைவத் திருமுறைகளில் ''கோயில்'' என்றே சிறப்பித்துச் சொல்லிப் போற்றிப் பாராட்டப் பெறுவது, இக்கோயிலே யாகும்.

இக்கோயில் பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்னும் முனிவர்களால் வழிபடப் பெற்றது; சைவ சமய குரவர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வர்களாலும் பாடப்பெற்றது; பல பெரியோர்கள் துதித்துப் போற்றி உய்ந்தது; ''தில்லை வாழ் அந்தணர்கள்'' ஆகிய தீட்சிதர் குலப் பெருமக்கள் தொன்றுதொட்டுப் போற்றிப் பூசித்து வருவது.

வேதாகம உபநிடதங்கள் ''தகராகாசம்'' என்று இத்தலத்தினைச் சிறப்பித்துப் போற்றுகின்றன. தேவார திருவாசகங்கள், திருமூலர் திருமந்திரம், சேக்கிழாரின் பெரியபுராணம் முதலிய நூல்கள் அனைத்தும் ''திருச்சிற்றம்பலம்'' என்று இத்தலத்தினைப் பெரிதும் சிறப்பிக்கின்றன. பண்டைத் தமிழ் வேந்தர்கள் இத்தலத்திற்கு வந்து, ஸ்ரீ நடராஜப் பெருமானை வழிபட்டு, முடிசூடிக் கொள்ளுதலை, ஒரு பெரும் சிறப்பாகக் கருதிக் கடைப்பிடித்து ஒழுகி வந்தனர். சைவத் திருமுறைகள் வெளிப்படுத்தப் பெற்றதும், பெரியபுராணம் பாடி அரங்கேற்றப் பெற்றதும் இப்புனிதத் தலமேயாகும். தமிழ் மக்களின் கட்டிடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும், நடனக் கலைக்கும் பிறவற்றிற்கும் சிறந்த கருவூலமாகவும் எடுத்துக்காட்டாகவும், இன்றளவும் சிறந்து ஓங்கிப் பொலிந்து வருவது, இப்புனிதப் பெருங் கோயிலே எனலாம்.

மிகவும் பழமையும் பெருமையும் புனிதமும் வாய்ந்த சிதம்பரம் என்னும் இப்பெருந் தலத்திலுள்ள ஸ்ரீ சபாநாயகர் ஆலயத்திற்குத் தொன்றுதொட்டுப் பேரரசர்கள் பலர் திருப்பணிகள் புரிந்து மகிழ்ந்து பயனடைந்தனர். இரணியவர்மன், கோப்பெருஞ் சிங்கன், மாறவர்மன் சுந்தர பாண்டியன், விக்கிரம பாண்டியன் குலசேகரன், ஆதித்த சோழன், முதலாம் பராந்தக சோழன், இராஜராஜசோழன், குலோத்துங்க சோழன், அநபாயன் என்னும் இரண்டாம் குலோத்துங்க சோழன், மணவிற் கூத்தன் காளிங்கராயன், விஜயநகரப் பேரரசர்கள், நாயக்க மன்னர்கள், சேர அரசர்கள் முதலிய பலர் இக்கோயிலுக்குச் சிறந்த திருப்பணிகள் பல புரிந்துள்ளனர். பராந்தக சோழன், அநபாய சோழன் முதலியோர் இக்கோயிலுக்குப் பொன் ஓடு வேய்ந்து, 'பொன்னம்பலம்' என்னும் இக்கோயிற் பெயரை மெய்ப்பித்தனர். அண்மைக் காலத்திலும் பல அரிய திருப்பணிகள் செய்யப்பெற்றன. ஆயிரக்கால் மண்டபத் திருப்பணி நிறைவுபெற்று திருமதில் வேலையில் ஒரு பகுதி தற்போது நடைபெற்று வருகிறது.

எனினும், இணையற்ற இம்மாபெரும் சிறந்த கோயிலுக்கு மேலும் பல திருப்பணிகள் செய்ய வேண்டுவது, மிகமிக இன்றியமையாததாக இருக்கின்றது. கோயிலின் திருமதில்கள் சிதைவுற்றுள்ளன; திருச்சுற்றுலேகளில் செடி கொடிகள் வளர்ந்து படர்ந்துள்ளன; கோபுரங்கள் பழுதுபார்த்துப் புதுப்பிக்கப் படவேண்டும். பிராகாரங்களைத் தளவரிசை செய்யவேண்டும்; யாத்திரீகர்களுக்குச் சத்திரம் தண்ணீர், சுகாதாரம் முதலிய பல வசதிகள் ஏற்படுத்தவேண்டும். இவற்றிற்கெல்லாம் பல திட்டங்கள் வகுத்து, மேற்கொள்ளப் பெறவுள்ளன.

அவற்றுள் ஒன்றே "பிறந்த நாள் வழிபாட்டுப் பேரறத் திட்டம்" என்பதாகும். ஆண்டொன்றுக்கு ரூ. 125 வழங்குபவர் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப் பெறுவர். ஒவ்வொரு வருடமும் அவர்களுடைய பிறந்த நாளில் (ஜென்ம நட்சத்திரத்தில்), அவர்களின் பெயரால் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்குச் சகஸ்ரநாம அர்ச்சனையும், ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளுக்கு அஷ்டோத்தர அர்ச்சனையும் செய்து, விபூதிப் பிரசாதம் நடராஜர் திருவுருவம் முதலியன, அவர்களுக்கு அனுப்பப் பெறும். இதற்கென (தீட்சிதர் கட்டணம் முதலியன உள்பட) ரூ. 25 ஒதுக்கப்படும். எஞ்சிய தொகை ரூ. 100 (ரூபா நூறு) ஸ்ரீ சபாநாயகர் ஆலயத்

திருப்பணி நிதியில் சேர்க்கப்பெற்றுத் திருப்பணிக்குப் பயன் படுத்திக் கொள்ளப்படும். இதனால் பிறந்த நாளில் இறைவனை அர்ச்சனை செய்து வழிபடுகின்ற புண்ணியத்தையும், ஆலயத் திருப்பணியில் கலந்து பங்குகொண்ட புண்ணியத்தை யும் அன்பர்கள் அனைவரும் ஒருசேர எளிதாகப்பெற வாய்ப்பு உண்டாகிறது. ஆதலின், திருப்பணிக்கு உதவும் நோக்கத் துடன் பல்லாயிரக் கணக்கான மக்கள் இத்திட்டத்தில் சேர்ந்து இறைவன் அருளைப் பெறுமாறு விரும்புகிறோம்.

விருப்பமும் வசதியும் உடையவர்கள் ஆண்டுதோறும் ரூ. 125 செலுத்தி, தொடர்ந்து எத்தனை ஆண்டுகளுக்கு வேண்டு மாயினும், இத்திட்டத்தில் கலந்துகொள்ளலாம். அவர்கள் ஆண்டுதோறும் செலுத்துதற்குப் பதில் ஒரே தவணையில் மொத்தமாகவும் செலுத்தலாம். அல்லது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 125 வட்டி மூலம் கிடைக்கக்கூடிய வகையில், நிலையான ஒரு மூலதனமாக ரூ. 2100/- (Fixed Deposit) ஆக வழங்கலாம். தாம் மட்டுமேயன்றி, தம்முடைய குடும்பத்திலுள்ள அனைவரையும் இத்திட்டத்திற் கலந்துகொள்ளச் செய்யலாம். மற்றும் தம் முடைய உற்றார் உறவினர் நண்பர்களையும் இத்திட்டத்திற் கலந்துகொள்ளத் தூண்டி, ஆயைத் திருப்பணிக்கு அரிய உதவிகள் புரியலாம்.

நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்குக் (ரூ. 1,000/–) குறை யாமல் இம் மாபெரும் ஆலயத் திருப்பணி நடைபெறவேண்டும். அதற்கு இத் திட்டத்தின் கீழ் ஒருநாளின் திருப்பணிக்குக் குறைந்தது பத்துப்பேராவது சேரவேண்டும். இம்முறையில் ஓர் ஆண்டு முழுவதற்கும் கணக்கிட்டால் ஏறத்தாழ நாலாயிரம் பேர் சேர்தல் வேண்டும். திருப்பணி பல ஆண்டுகள் தொடர்ந்து, பெரிய அளவில் நடைபெற வேண்டியிருப்பதால், பல லட்சக் கணக்கானவர்களை, இத் திட்டத்திற் கலந்து கொள்ளச் செய்யவேண்டுவது இன்றியமையாத கடமையாக இருக்கின்றது.

எனவே, தில்லை ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவடிகளில் அன்பும் பக்தியும் உடைய அனைவரும், இத்திட்டத்திற் கலந்து கொண்டு நன்கொடை வழங்கி உதவி புரிவதுடன், நமது தமிழ் நாட்டின் சமயக் கலைப் பண்பாட்டு நாகரிக வளர்ச்சிகளுக்கும் தக்க ஆதரவு புரிந்து, நலம்பல எய்தப் பெரிதும் வேண்டிக் கொள்கின்றோம்

குறிப்பு: (1) நன்கொடைப் பணம் வருமானவரியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறது. (வருமான வரிச்சட்டம், 1961, 88 (6) பிரிவின் அறிக்கை எண் அனுமதி உத்திரவு 171. தேதி 5, ஜனவரி, 1966.)

பணம் அனுப்ப வேண்டிய முகவரி :-

தர்ம பூஷணம்
ஸ்ரீ சே. இரத்தினசாமி செட்டியார்
பொருளாளர்,
தில்லைப் பெருங்கோயில் திருப்பணி பிறந்தநாள்
வழிபாட்டுத் திட்டம், சிதம்பரம்.

I am very happy that I and my friends could worship in this ancient temple. All the religious institutions under the management of the Dharmapuram Adhinam seem to be efficiently administered. His Holiness the Mahasannidhanam appears to be taking a personal interest in the administration of these temples. He deserves congratulations and thanks of the public therefor.

(Sd.) A. Alagiriswami,
Judge, High Court,
29—1—67.

(Sd) P. Chandra Reddy,
Vice Chancellor
Annamalai University.
29—1—67.

விசேஷ நாட்கள்

11—2—67 முதல் 11—3—67 முடிய

17—2—67	வேளூர்க் கிருத்திகை
22—2—67	பிரதோஷம்
27—2—67	எறிபத்தநாயனார் திருநக்ஷத்திரம்
6—3—67	காரிநாயனார் திருநக்ஷத்திரம்
7—3—67	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் கனகாபிஷேகம் கொண்டருளிய திருநக்ஷத்திரம்
8—3—67	பிரதோஷம்
9—3—67	மகாசிவராத்திரி
10—3—67	சனிப்பெயர்ச்சி, கோச்செங்கட்சோழ நாயனார் திருநக்ஷத்திரம்.

அப்பர் அருள்முரசு

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.

(மலர் 26, இதழ் 2. பக்கம் 91 இன் தொடர்ச்சி)

மனத்தில் மலர வை

93. இறைவா! மரண காலம் வருவதற்குள், என் நெஞ்சத்தில் உன் திருவடிகளை மலரவை. உன் திருவடிகளை என் நெஞ்சில் இருத்திக்கொண்டால் நான் காலத்தை வென்றிருப்பேன். (938)

வேறுபயன் ஏது?

94. சிவம் விளங்கும் கொழுந்தே! உன் திருவடிகளை சரண்புகுந்த எனக்கு உன் அன்பை விடவேறு எவ்வன்பு உயர்ந்தது? உன்னை அடையும் பயனைவிட வேறு எப்பயன் எனக்கு உள்ளது? (941)

ஆறும் குளமும்

95. இறைவனை இருக்கும் இடம்தேடித் தொழத்தெரியாத மக்கள் எங்கெல்லாமோ தேடி அலைகின்றார்கள்; ஆம்; ஆற்றிலே ஒருபொருளைத் தொலைத்துவிட்டுக் குளத்திலே சென்று தேடும் அறிவு உடையவர்கள் இவர்கள்; காற்றைப் போல விரைந்து உலகத்திலே திரிகின்றார்கள். (948)

மறக்கருணை

96. இறைவ! உனக்குச் செய்யும் பணிகளை நான் தவறாது செய்வேன் அதிற் சிறிதும் தவறினால் புளியம் வளாரால்மோதுவிக்கும் உன்மறக்கருணை என்பதை நான் அறிவேன்; மகிழ்பவனும் நீயே; வெறுப்பவனும் நீயே; உன்னையன்றி வேறுஎனக்கு யார்? (956)

ஒரே பரம்பொருள்

97. வெவ்வேறு சமயங்களினுள்ளும் ஒன்றாய் நின்று வாழ்விப்பது ஒரு பரம்பொருளே. (969)

ஒரே பரம்பொருள்

எல்லாச் சமயங்களிலும் வாழும் அன்பர்களைத் தெளிவுறுத்தி அவர்கட்கு அருட்காட்சி வழங்குவதும், அவர்களை இன்பநிலைக்கு ஈர்த்துச் செல்வதும் பரம்பொருள் ஒன்றே.(972)

பித்தும் பேறும் :

99. சித்தம் உருகுதல் வேண்டும்; 'சிவனே! என் தலைவனே' என்று உள்ளத்துள்ளே ஓலமிடும் பித்துப் பெருக வேண்டும்; அத்தகு பிதற்றல்களை உடையவர்க்கே துன்ப நீக்கமும் இன்பப்பேறும் வாய்க்கும். (1038)

எதுவரினும் என்ன ?

100. வானம் ஆடினுல் என்ன? நில உலகில் நடுக்கம் வந்தால் என்ன? பெருமலைகள் அனைத்தும் இடந்தடுமாறி உருண்டுவரின் என்ன! கடலில் மீன்கள் சிதைந்தால் என்ன! இருசுடர்கள் உதிர்ந்தால் என்ன! கடல் நஞ்சை உண்டும் வாழ்கின்ற பெருமானுக்கு உண்மையில் அன்பு பூண்ட பெருமக்களுக்கு இவ்வனைத்தினுலும் ஒரு சிறிதும் துன்பம் இல்லை. (1057)

மலை உண்டு !

101. கடலில் நீர் வற்றி, மழைகள் பெய்யாமல், உலகம் முற்றும் பஞ்சம் வந்த போதிலும் சரியே; நெஞ்சமே! சிறிதும் அஞ்சாதே! பரம்பொருளாகிய வளங்கெழுமிய மலை ஒன்று உண்டு, இவ்வுலகம் அனைத்தினையும் காத்திட! (1099)

அல்லல் என்செய்யும் ?

102. தில்லையில் ஆடும் இறைவனுக்கு அடிமைபூண்ட எனக்கு அல்லல், வினை முதலிய எல்லாம் என்ன துன்பம் செய்யமுடியும் ? (1074)

மூச்சும் முதலும்

103. என் உடலில் மூச்சுக்காற்று விடும் போதெல்லாம் நான் என் தலைவனைக் கலந்துகொண்டிருக்கும் இன்ப அநுபவத்தை எய்துகின்றேன். (1075)

நினைப்பவர் மனம்

104. யானையை உரித்துப்போர்த்த கடவுளாகிய பெரு வீரன், எளிமையாக, நினைப்பவர் மனங்களிலே யெல்லாம் எழுந்தருளுவான்; ஆம்; அவ்வுள்ளங்களை ஆலயமாகக் கொள்பவன் அவன். (1082)

அண்ணாமலை தொழுக

105. நல்ல தவமும் ஞானமும் பெற எது வழி? நாம் செய்த குற்றங்களை யெல்லாம் போக்கும் திருவண்ணாமலையினைத் தொழுதலே அவ்வழி. (1113)

ஆடல் பாடல் நெறி

106. இறைவனை வழிபடும்போது நம்வயமிழந்து பாடுதல் வேண்டும்; அவன்புகழ்பாடி ஆடுதல் வேண்டும். இந்த ஆடலும் பாடலும் நம் உள்ளத்தை அவன் திருவடியில் ஒன்றுபடுத்தும். அதனால் நாம் செய்தவினை நம்மைவிட்டு ஓடிப் போகும்; இன்பம் விளையும். (1115)

நெஞ்சின் தவம்

107. நெஞ்சே! நீ எவ்வளவு பெருந்தவம் செய்திருக்கின்றாய்! இறைவன் சிந்தைக்குள்ளும் சிரத்தின் மேலும் தங்க வல்லவோ பெற்றாய், நீ! (1133)

தூங்கும்போதும் நினைக

108. தூங்கும்போதுகூட அவன் திருவடிச் சிந்தனையோடு தூங்குதல் வேண்டும்; அதுவே உண்மையான உள்ளத்தின் உண்மையான வழிபாடு. (1159)

பெருங்கருணை

109. இறைவன் தன்னை மனம் கரைந்து வழிபடுபவர்க்கு அன்புடையவனாக இருப்பான்; அதனால் அவனை நிந்தித்து இகழ்வார்க்கு அவன் அன்பினின்று மாறுவான் என்பதில்லை; அவர்களையும் அவன் வருந்தும்படி விடமாட்டான். (1184)

நெருப்புச்சுடும்

110. நெருப்புச் சுடுவதை அறிந்தும் அதை மடியில் வைத்துக் கட்டிக்கொள்வார் உண்டோ? உலகியல் நிலை யாதது; துணைக்கு வாராது என்று அறிந்தும் அதனைத் துணைக்குக் கொள்ளுவது அதனைப் போலத்தான். *(1189)*

எல்லாம் நீயே!

111. கண்ணுக்குத் தெரியும் இந்த மண்ணுலகம்; இதனைக் கவிந்து நிற்கும் விண்ணுலகம்; இவ்வுலகின் கூறுபாடுகளாகிய நன்மை; தீமை; கழிந்துகொண்டேயிருக்கும் காலம்; இவை யனைத்தையும் கருதும் கருத்து; அக்கருத்தினால் உன்னை நினைந்து தொழுகின்ற ஒழுக்கம். இவையனைத்தும் இறைவா! நீயேயன்றோ? இவற்றை உணர்வித்துத் தெளிவித்து அடியேனைக் குறிக்கொண்டு காத்தருள்வாயாக.

உருகும் உள்ளம்

112. என் உள்ளம் பேரழகனாக விளங்கும் இறைவனை நினைத்து நினைத்து, ஊறி ஊறி உருகும். *(1210)*

இனிமை நிலை

113. இனிய பழம்; சுவையுள்ள கரும்புக்கட்டி; குளிர்ந்த மலர்களையணிந்த கூந்தலை உடைய பாவையனைய பெண்டிர்; ஒப்பற்ற முடி கவித்து உலகையாளும் அரசு; இவையனைத்தையும் விடத் தன்னை அடைந்த அன்பர்கட்கு இனிப்பவன் இறைவன் ஒருவனே; (அவனைத் திருவிடைமருதூரிற் கண்டு தொழுதேன் நான்.) *(1214)*

அநுபவம்

114. அவனையே நினைந்திருந்தேன் நான்; என் நாவினுக்கு அமுதாய் இனித்தான் அவன். இஃது என் அநுபவம். *(1234)*

உணர்வு :

115. வேள்விகள் புரிந்தால் மட்டும் போதாது; உள்ளத்துள்ளும் இறைவனை உணர்தல் வேண்டும்; அந்த உணர்வுடன் அவனை ஓதினால் துன்பங்கள் தூளாகும். *(1251)*

(தொடரும்)

தையல்நாயகி அந்தாதி

[மூலமும் உரையும்]

(மலர் 26, இதழ் 2, பக்கம் 104 இன் தொடர்ச்சி)

ஆண்டகை யான வயித்திய நாதற் கருமருந்தே!
நீண்ட புகழுடையாயெனை யின்று நினைகிற்றிலாய்
வேண்டடி யாரின் குறிப்புணர்ந்தீயும் வினையுடையாய்
மாண்டரும் வேளூர்த் தயிலம்மை யென்கண் மனம்வைப்பையே?

(இ - ள்) வேண்டு அடியாரின் குறிப்பு உணர்ந்து ஈயும் வினையுடையாய்-நல்லனவற்றினை விரும்புகின்ற சிவபக்தர் மனக் கருத்து அறிந்து அன்னவாறே கொடுத்தருளும் நற்செய்கை யினையுடைய பெருமாட்டியே! ஆண்டகையான வயித்திய நாதற்கு அருமருந்தே - மாதேவப் பெருந்தகையாகிய வயித்திய நாதப் பெருமானுக்கு அரிய அவுடதமாக விளங்குகின்ற விமலையே! நீண்ட புகழ் உடையாய் - மிகப்பெரிய புகழினைத் தாங்கி நிற்பவளே! மாண்தரும் வேளூர் தயிலம்மை - மாண் பொருள் அளிக்கும் வேளூரிற்றிருக்கோயில் கொண்டருளிய தையல் நாயகியம்மையே! இன்னும் என்னை நினைகிற்றிலாய் - மேலும் அடியவனை திருவுள்ளத்திடை தேவரீர் எண்ணியருள வில்லை. ஆகையினால் என் மனம் வைப்பை ஒ - அடியவனிடத் தின் திருவுள்ளம் வைத்தருளுவீராக.

(கு - ரை) அடியார் - திருவடிகளையே பற்றுக்கோடாக வுடைய சிவபத்தர்கள். மாண் - மாண் பொருள் (புருடார்த்தம்) அருமருந்து - தேவாமிருதத்தினும் மிக்க மேலான அவுடதம், ஆண்டகை - பெருந்தகைமை யுடையவர்.

மனவின் கருவை யனமடை காக்கும் வயலயஞ்சூழ்
மனவியன் மாணடி யாருறை வேளூர் வருமனையே!
கனவின் முடிந்ததிவ் வையத் துறுசுகங் காதலுன்பாற்
பனவின் னருள்புரி யாய்தைய லாயகி பார்த்தெனையே. 64

(இ - ள்) மனவுஇன் கருவை அன்னம் அடைகாக்கும் வயல் அயம் சூழ் வேளூர் - சங்குகளுடைய கருவினை அன்னப் பறவைகள் தன் முட்டைகள் என்று கருதி அடைகாக்க நின்ற வயல் நிலங்கள் சூழ்ந்த வைத்தீசுவரன்கோயிலில், வரும் அன்னையே - எழுந்தருளிய தாயே! மனம் இயல்மான் அடியார்

வேளூர் – நல்ல உள்ள மனப்பான்மையுடைய மாட்சிமையுடைய தாசர்கள் தங்கிய வேளூர் அன்னையே, தையல்நாயகி - பாலாம்பிகையே, இ வையத்து உறுசுகம் கனவின் முடிந்தது – இப்பூவுலக சுகவாழ்க்கையானது கனக்கண்டது போலாயிற்று. எனை பார்த்து - அடியவனைக் கடைக்கண் பார்வை செய்தருளி. காதல் உன்பால் பின்ன இன் அருள்புரியாய் - அன்புடன் தேவரீரிடத்தில் கூறி விண்ணப்பம்புரிய திருக்கருணை செய்வாய். (எ - று)

(கு - ரை) பன்ன - கூற (தொகையாயிற்று. இடைக்குறை). மனவு - சங்கு. கரு - மணி (முட்டை). அன்னம் அனமென வாயது. அயம் - நிலம். அன்னை அனையென வந்தது. வையத்துறு சுகம் - உலக இன்பம். காதல் - ஆசை (அவா).

பார்த்தெந்தத் தேவரைந் தோத்திரித் தாலுமுன் பாதத்திலே
சேர்த்திடு வீரென் றுரைப்பதல் லாற்பிற சிந்தை செய்யேன்
ஆர்த்தியெ னக்கது வாயிடும் வேளூ ரமர்ந்தவளே !
போர்த்தென் பிணியொழிப் பாய்தைய னாயகப் பெண்ணரசே. 65

(இ - ள்) எந்த தேவரைப் பார்த்து தோத்திரித்தாலும் - எந்த தேவர்களைப் பார்த்து துதிசெய்தாலும், உன் பாதத்திலே சேர்த்திடுவீர் என்று உரைப்பது அல்லால் - தேவரீருடைய திருவடியினிடத்திலே சேர்த்துக்கொள்வீர் என்று இயம்புவது அல்லாமல், பிற சிந்தை செய்யேன் - வேறு எவற்றினையும் சிந்திக்கமாட்டேன். எனக்கு ஆர்த்தி - அடியவற்கு விருப்பம். அது வாய் இடும் - அஃது ஒன்றுமேயாகும். வேளூர் அமர்ந்தவளே தையல்நாயகம்பெண் அரசே - வைத்தீசுவரன் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ளவளே! தையல்நாயகியாகிய பெண் அரசே! போர்த்து - மீளவும், பிணி ஒழிப்பாய் - விரைவில் பெருநோயினை ஒழித்தின்பினையளிப்பாய்.

(கு - ரை) ஆர்த்தி - விருப்பம், போர்த்தல் - மீளவும். விரும்பி யுள்ளவள். எந்த தேவர் - பரம விட்டு உருத்திராதி தேவர்கள்.

பெண்ணணங் காகியென் கண்ணக நீங்காப் பெருமருந்தே !
புன்னணங் காலிவண் வாடி நலிந்து புகமுடியின்
கன்னணங் கால்வரங் காமுற் றுரைத்தனன் காட்சிதந்தென்
தன்னணங் காந்தைய னாயக மேயரு டந்தருளே. 66

(இ - ள்) பெண் அணங்குஆகி என் கண் அகம் நீங்கா(த) பெருமருந்து - பெண்ணுருவுற்ற தெய்வவடிவாகி அடியவன்றன்

அகக்கண்ணின்றும் விட்டு விலகாத பெறற்கரிய பெரிய தேவாமிருதமே! புன் அணங்கு ஆல் இவன் வாடி நலிந்து - (நாளென வொன்று போற்கட்டி உயிரீரப் பெறலால்.) உண்டாகிய புண் வருத்துதலைச் செய்தலால் இவ்வுலகில் வாடுதலையுற்று மெலிந்து (இது காரணமாக) புகழ் அடியின்கண் - பெரும் புகழ் மயமாகிய தேவரீருடைய திருவடியினிடத்து. அணவும்கால் வரம் காமுற்று உரைத்தனன் - நெருங்கியிடும் காலத்தினை நோக்கி வரத்தினை வேண்டிக் கூறினேன், காட்சி தந்து - அருளுருக் காட்சியருளி, என் தண் அணங்கு ஆம் தையல் நாயகம் ஏ - அடியவன்றன் முத்தித்திருவாகிய தையல்நாயகித் தாயே! அருள் தந்தருள் ஏ - கருணை புரிந்தருளுவீராக. எ - று.

(கு - ரை) அணங்கு - தெய்வம், வருத்தம், திருமகள், நலிவு - மெலிவு. கால் - காலம் (பருவம்). அணவும் அணம் என வாயது. 'மருந்து புண்ணுக் காகுமாகலான் பெருமருந்தே என்றார். அகம் - இடம். (எ - று)

தந்தக் கரட மதாசல மேறியித் தாரணியில்
வந்தர சாண்டிடு மன்னவர் வாழ்வை மதியினெண் ணேன்
அந்தி புலரியுன் பாதந் தொழமிக வாசை யுற்றேன் (றேன்)
சிந்தை நிறைவுறச் செய்வாய் தயிலம்மை செப்பின னே. 67

(இ - ள்) தயிலம்மை - தைலம்மையாகிய தாயே! தந்தம் கரடம் மதாசலம் ஏறி இதாரணியில் வந்து அரசு ஆண்டிடும் மன்னவர் வாழ்வை மதியின் எண்ணேன் - தந்தங்களையும் (கொம்புகளையும்) மதம்பாய் சுவடுகளையும் உடைய களிற்றி யானையின்மீது ஆரோகணித்து (இவர்ந்து) இம்மண்ணுலகில் பிறந்து செங்கோலாட்சி புரியும் சக்கரவர்த்தியாகி வாழும் அரசச் செல்வத்தை அடியனேன் மனத்தில் ஒரு பொருளாக் கொண்டு கருதமாட்டேன். அந்தி புலரி உன் பாதம் தொழ மிக ஆசையுற்றேன் - இரண்டு சந்தியா காலத்தும் (மாலையிலும் காலையிலும்) விடியற்காலத்தும் தேவரீருடைய திருவடிகளை வாழ்த்தி வணங்க மிகவும் அவாக்கொண்டுள்ளேன். சிந்தை நிறைவுஉற செய்வாய் - அடியவன்றன் மனக்கருத்து நிறைவுறு மாறு செய்தருளுவீராக. (எ - று). செப்பினன் - விண்ணப் பித்துக் கொண்டேன். (எ - று)

(கு - ரை) மதம் அசலம் - மதமலை (யானை.) அந்தி - அந்த முடையது. புலரி - வைகறைக்காலம் (பொழுது விடியும்

பொழுது.) மதி - உள்ளம் (அறிவுமாம்) ஆசையுற்ற, என் சிந்தை நிறைவுறச் செய்யாய் எனப்பாடமோதி - அவாவுற்ற என்னுடைய மனம் பூரணமாகச் செய்வாய் என்று பொருள் கோடலுமாம்.

செய்யமர் கூடற் பதியிற் புலமையன் செப்பியவோர்
பொய்யணு காதநூ றந்தை மடியினிற் போந்திருந்தே
யைய மறக்கொள் செவியிலென் புன்மொழி யார்ந்திடுமோ ?
வையம் புகடைய லுயகி நீக்கில் வழியென்னையே. 68

(இ - ன்) வையம்புகழ் தையல்நாயகி - உலக மக்கள் அனைவரும் (ஒருங்கே ஒருமித்த உளத்தொடும்) புகழ்ந்துரைக்கும் புகழ்மாலையினையுடைய தையல்நாயகியம்மையே! செய் அமர் கூடல் பதியில் - மருதம் என்னும் பழனம் சூழ்ந்த நான்மாடக் கூடலாகிய மதுரையம்பதியின்கண், புலமையன் - (செந்திலாண்டவன்றிருவருளாற் பெற்ற) பெரும்புலமையினையுடைய குமர குருபர அடிகளார், செப்பிய - கூறிய, ஓர் - ஒப்பற்ற (நூல்) பொய் அணுகாத நூல் - பொய்ம்மைத்தன்மை சிறிதும் பற்றாத மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் என்னும் பெருநூலை, தந்தை மடியினில் போந்திருந்து ஏ - உலகத்தந்தையாகிய திருமலை நாயகர் என்னும் மகாராசாவின் மடியின்மீது குழந்தை வடிவாக எழுந்தருளி வந்து, ஐயம் அறகொள் செவியில் - உலகமக்கள் சந்தேகம் நீங்க (மீனாம்பிகைத் தாயாரே யாவும் என) திருச் செவிகளால், கொள் - கேட்டருள (நீ, அச்செவிகளில்) என்புன் மொழி ஆர்ந்திடும் ஓ - ஏழையேனுடைய புற்கென்ற (அற்பமான) சொற்களையுடைய செய்யுள் நிறைக்கப்பெறுமோ? (பெறமாட்டாது) நீக்கில் வழி என்னை ஏ - ஏற்றுக்கொள்ளாது விலக்குவையானால் உய்யு நெறியாவது யாது (கூறியருளுவீராக) (எ - று)

(கு - ரை) வையம் - ஆகுபெயர். செய் - நன்செய் நிலம். பொய்யணுகாத நூல் - மீனாட்சியம்மை பிள்ளைக்கவி. ஆர்தல் - நிறைதல் (ஏற்றல்) புகழ் - தையல் - புகடையல் (திகழ்தசம் - திகடசம் என வந்தாற்போல.) (எ - று)

(தொடரும்)

திருத்தொண்டர் வரலாறு

(1) தில்லை வாழந்தணர்

' தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் '

— திருத்தொண்டத் தொகை

தில்லை வாழந்தணர் நடராசப் பெருமானை வேத சிவாகம விதிப்படி நாடோறும் பூசிக்கும் பேறு பெற்றவர். அன்போடு இறைவனுக்கு அகம்படிமைத் தொண்டு செய்பவர். இருக்கு யசுர் சாமம் அதர்வம் என்னும் நான்கு வேதங்களையும், சிட்சை, வியாகரணம், சந்தோவிசிதி, நிருத்தம், சோதிடம் கற்பம் என்னும் ஆறங்கங்களையும் கற்றவர். ஆகவனீயம், காருக பத்தியம், தக்ஷிணாக்கினி என்ற முத்தீ வளர்ப்பவர். திருநீறே தங்களுக்குக் கிடைத்தற்கரிய செல்வம் என்றும், நடராசப் பெருமான்பால் கொள்ளும் அன்பே பெறுதற்கரிய பேறு என்றும் கருதி வாழ்பவர்.

சிவாகமங்களில் கூறும் பாதம் முதலிய நான்கு பாதங்களை நன்குணர்ந்த தில்லை மூவாயிரவர் என வழங்கும் தெய்வ வேதியர்களாம் இவர்கள் நடராசப் பெருமானுடைய திருவருளை இம்மையிலேயே பெற்றவர். இனிப்பெறும் பேறொன்று இல்லாதவர். தமக்குத்தாமே ஒப்பானவர்.

தென்தமிழ்ப் பயனாய் எழுந்த திருத்தொண்டத்தொகை பாடுதற்கு ஆரூர் இறைவன் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று அடியெடுத்துக்கொடுத்த முதலடியார்கள் இவர்கள்.

(2) திருநீலகண்ட நாயனார்

' திருநீலகண்டத்துக் குயவனார்க்கடியேன் '

— திருத்தொண்டத் தொகை

தொண்டு :-

தில்லையம்பதியில் குயவர் குலத்தில் தோன்றியவர், திருநீலகண்டர். நடராசப்பெருமானிடத்தில் பேரன்புகொண்ட இவர் அடியார்களுக்குத் தொண்டு புரிவதையே கடமையாகக்

கொண்டவர். தாம் பிறந்த குலமரபின்படி மண்பாண்டங்களைச் செய்து விற்று அவ்வருவாயைக் கொண்டு இல்லறமியற்றி வந்தவர். சிவனடியார்களுக்குப் பிச்சை பாத்திரமாகிய திருவோடுகளைச்செய்து மகிழ்வோடு தரும்பணியில் ஈடுபட்டிருந்தவர்.

திருநீலகண்டர் என்ற பெயர் பெறுதல் :-

இவர் திருப்பாற்கடலில் பொங்கியெழுந்த ஆலகாலவிடத்தை அமுதாக உண்டடக்கிய சிவபெருமானது நீலமணிமிடற்றினையே நினைந்து நினைந்து திருநீலகண்டம் எனப் போற்றுவார். ஆதலால் இவ்வடியவரை அனைவரும் திருநீலகண்டர் என வழங்கினர்.

இல்லற வாழ்வில் துறவு நிலை :-

இளமைப் பருவம் காரணமாகத் திருநீலகண்டர் சிற்றின்பத்தில் மிக்க விருப்பங்கொண்டு பரத்தையர் வீட்டிற்குச் சென்று வந்தார். அவர் மனைவியார் காலங்கடந்து வந்த திருநீலகண்டர்தம் புற ஒழுக்கத்தை அறிந்து அவர்பால் ஊடல் கொண்டார். அவ்வூடலை நீக்கும் முயற்சியில், திருநீலகண்டர், தம் மனைவியாரைத் தழுவ முற்பட்டார். அப்போது அவ்வம்மையார் 'நீர் எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்' என்று இறைவர்மீது ஆணையிட்டனர்; அதனைக்கேட்ட நாயனர் தழுவுதலை விடுத்தார். தம் மனைவியை அயலார் போலநோக்கி, 'எம்மை என்று கூறியதனல், உம்மையே அன்றிப் பிறமாதர் எவரையும் என் மனத்திலும் தீண்டமாட்டேன்' என்று உறுதி கூறினர்.

சிவபிரான் சிவயோகியாய் வருதல் :-

சிவபெருமான் திருநீலகண்டரின் பெருமையை உலகிற்கு உணர்த்த, தாமே ஒரு சிவயோகியாய், கையிலே திருவோடு ஒன்று ஏந்தித் திருநீலகண்டர் வீட்டிற்கு வந்தார். சிவயோகியாரைத் திருநீலகண்டர் வரவேற்று உபசரித்து நின்றார். திருநீலகண்டர், 'பெருமானே! யான் செய்யத்தக்க பணி யாது' எனப் பணிவுடன் வினவினர்.

சிவயோகியார், "அன்பனே! இந்தத் திருவோட்டினை நீ வைத்திருந்து யாம் வேண்டும்போது மீளத் தருவாயாக! இத்திருவோடு ஒப்பற்றது. தன்னிடம் வைத்த பொருள்களைத் தூய்மையாக்கவல்லது. பொன்னையும் மணியையும் விடச் சிறந்தது. இதை உன்னிடம் அளிக்கிறேன் வாங்கி வைப்பாயாக!"

என்று கூறித் திருவோட்டைக் கொடுத்தருளினர். திருநீல கண்டரும் அதனை வாங்கிப் பாதுகாப்பான இடத்தில் வைத்தார். சிவயோகியாரும் தம்மிடம் சென்றார்.

திருவோட்டைத் திருப்பிக் கேட்டல் :-

நாள்பல கழிந்தன. சிவபிரான் திருநீலகண்டரிடம் அளித்த திருவோடு மறைந்து போகுமாறு செய்தருளினர். திருநீல கண்டரின் பக்தியைப் பிறருக்குக் காட்ட முன்போல சிவயோகியராய் அவர் வீட்டுக்கு எழுந்தருளினர். திருநீலகண்டரும் சிவயோகியாரை முறைப்படி வரவேற்று முகமன் கூறினர். வந்த சிவயோகியார் திருநீலகண்டரிடம் முன்பு தந்த திருவோட்டைத் திருப்பித்தருமாறு கேட்டார்.

திருநீலகண்டரின் திகைப்பு :-

திருநீலகண்டர் திருவோட்டை வைத்த இடத்திற்குச் சென்று தேடினர். திருவோட்டைக் காணவில்லை. பல வழிகளிலும் தேடிக்காணது திகைத்து நின்றார். வெளியிலிருந்த சிவயோகியார், 'இன்னும் திருவோட்டைக்கொண்டு வாராது என் செய்கிறாய்!' என்று அதிகாரத்தோடு உரக்கக் கூவினர். செய்வதறியாது திகைத்த திருநீலகண்டர் சிவயோகியாரிடம் வந்து, 'தாங்கள் அளித்த அவ்வோட்டை வைத்தஇடத்தில் தேடினேன் அகப்படவில்லை; ஆதலால் பழையதான அவ்வோட்டை விட நல்லதொரு புதிய பாத்திரம் தருகின்றேன். அதைப் பெற்றுக்கொண்டு என் பிழையினைப் பொறுத்தருளுங்கள்' என வேண்டினர். சிவயோகியார் கோபங்கொண்டு, 'நான் உன்னிடம் தந்த மண் ஓட்டைத்தவிர பொன்னோடு தந்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். உன்னிடம் தந்த அதனையே தந்துவிடுக' என்றார்.

திருநீலகண்டர், 'பெரியோய்! அவ்வோடு காணமல்போய் விட்டது. அதற்குப் பதிலாக நான்தரும் ஓட்டினை ஏற்றுக் கொள்ளாது அதனையே வேண்டுமென்று கூறுகிறீர்களே! அதற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை' என்றார்.

சிவபிரான் திருநீலகண்டரை நோக்கி, "அடைக்கலமாக நான் தந்த பொருளை நீகவர்ந்து கொண்டு நாணமிலாது நடிக்கிறாய்; பழிக்குச்சிறிதும் அஞ்சாத உன்னிடமிருந்து என் திருவோட்டை வாங்காமல் இவ்விடம் விட்டுப் போகமாட்டேன்." என்றார். திருநீலகண்டர். "நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. அதனை மெய்ப்பிக்கத் தாங்கள் என்ன சொன்னலும் செய்கிறேன். என்று கூறினர். உடனே சிவயோகியார், 'உன் மகனைப் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கித் திருவோட்டினை

நான் அபகரிக்கவில்லை என்று கூறிவிட்டுப்போ!'' என்றார். அதனைக்கேட்ட திருநீலகண்டர் ''ஐயா! சத்தியம் செய்தற்கு எனக்குப் புத்திரன் இல்லை, வேறு என்ன செய்யவேண்டுமோ சொல்லுங்கள் செய்கிறேன்,'' என்று கூறினர். அதனைக்கேட்ட முனிவர், ''உன் மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கிச் சத்தியம்செய்'' என்றார். திருநீலகண்டர், 'ஐயா! நானும் என் மனைவியும் ஒரு சத்தியம் செய்து கொண்டிருக்கிறோம். ஆதலால் அவள் கையைப்பற்றிக்கொண்டு மூழ்குதற்கு இல்லை. நானே அவ்வாறு மூழ்கி உறுதிமொழி கூறுகிறேன்.' என்று கூறினர். அதனைக்கேட்ட சிவயோகியார் சினந்து, 'நான் தந்த பாத்திரத்தைத் திருப்பித்தராமல் நான் சொன்னவாறு சத்தியம் செய்துதர மறுக்கும் உன் உள்ளம் உறுதியானது. இவ்வழக்கைத் தில்லைவாழந்தணர் அவையில் சொல்லி ஒரு முடிவு எடுக்கப்போகிறேன்' என்று திருநீலகண்டருடன் பேரம்பலத்தை அடைந்தார்.

வழக்குரைத்தல் :- தில்லை வாழந்தணர்கள் கூடியிருந்த அவைக்குச் சென்று சிவயோகியார் இவ்வழக்கை எடுத்துரைத்தார். அந்தணர்கள் திருநீலகண்டரை விசாரித்து, சிவயோகியார் விரும்பும்வண்ணம் சத்தியம் செய்து தருவதே நியாயம் என முடிவு கூறினர்கள். திருநீலகண்டர் அதனை ஏற்றுக் கொள்பவராய்த் தமக்கும் தம்மனைவிக்கும்உள்ள அவ் உறுதியை அங்குக்கூறாது சிவயோகியாரைத் திருக்குளத்திற்கு அழைத்தார். திருப்புலீச்சரம் என்னும் சிவாலயத்திற்கு முன்னுல் உள்ள திருக்குளத்தைஅடைந்து ஒருமூங்கில்தண்டை ஒருபுறம் மனைவியாரும் மற்றொருபுறம் தானும் பற்றிக்கொண்டு குளத்தில் இறங்கினர். சிவயோகியார் திருநீலகண்டரைத் தடுத்து, கையைப்பற்றிக் கொண்டுதான் முழுகவேண்டும் என்று வற்புறுத்தினர்.

திருநீலகண்டர் தன் மனைவியைத் தீண்டாதிருக்கும் காரணத்தை யாவரும் அறியுமாறு எடுத்துக்கூறி மூங்கிலைப் பிடித்த வண்ணமே மனைவியோடு குளத்தில் மூழ்கினர்.

சிவபெருமான் அருட் காட்சி வழங்கியது :- திருக்குளத்தில் மூழ்கி எழுந்த நிலையில் இருவரும் முதுமைநீங்கி இளமை எய்தி விளங்கினர். சிவயோகியார் மறைந்தார். உமையம்மையோடு சிவபெருமான் விடை மீது தோன்றி அருட்காட்சி வழங்கியருளினர். அருகில் நின்றோர் அனைவரும் வியந்துகண்டு அகம்மகிழ்ந்தனர். திருநீலகண்டரின் பெருமையை அறிந்து தேவர்கள் துதித்தார்கள். இறைவன் அவர்களை நோக்கி. ''ஐம்புலனை வென்ற அன்பர்களே! நீங்கள் எய்திய இந்த இளமையோடு என்றும், நம்முடன் இருப்பீர்களாக' என்று அருளிச்செய்து மறைந்தார். திருநீலகண்டரும் அவர் மனைவியாரும் என்றும் நீங்கா இளமைப் பருவத்தோடு சிவலோகம் அடைந்து இன்புற்றனர்.

வேளூர் தேவஸ்தானம் (வைத்தீசுவரன்கோயில்)

இலவச சித்த வைத்தியசாலை,

டாக்டர். K, இராமகிருஷ்ணன்

நீரிழிவு - புதுமையும் பழமையும்

நோயற்ற வாழ்வு நிறைவுற்ற செல்வம். அரியதாம் மானுடப் பிறவி நோய் நொடியின்றி அமையுமாயின் அதனினும் கிடைத்தற்கரிய பேறு ஏதும் இல்லை. இன்று உலகில் உள்ள மக்களில் பாதிக்குமேல் நீரிழிவு நோயால் அல்லலுறுகின்றனர். நீரிழிவு நோய்க்குள்ளானவர் ஊக்கம் இழந்து, சோர்வுற்று வருந்துகின்றனர். இவர்களுக்கு இந்நோயினின்று விடுதலை உண்டா? திருவள்ளுவர்,

> " நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல் "

என்று கூறுகிறார். நீரிழிவு நோயின் காரணத்தை ஆங்கில வைத்திய முறை ஆராய்ச்சி செய்து கண்டுள்ளது. அது தணிக்கும் வாய் அதாவது வழிகண்டது. எனினும் அதை முற்றிலும் அறவே ஒழிக்கும் வழியை இன்றும் காணவில்லை. தற்காலிகமாக உபசாந்தியாக அது சில முறைகளைத்தான் கண்டுள்ளது. அகத்தியர், பதினெண்சித்தர்கள் பலநூறு ஆண்டுகட்கு முன்னரே இந்நோயின் கூறுகளைத் திட்டவட்டமாகக் கண்டறிந்திருந்ததுடன், இந்நோயின் மூலத்தை அறவே ஒழித்து செயல் அற்றிருந்த உறுப்புக்களையும், சுரப்பிகளையும் திட்டமாய் வேலை செய்யச்செய்யும் மருந்து வகைகளையும் அறிந்திருந்தார்கள் என்று அறிய பேருவகையும் வியப்பும் அடைகிறோம். தகுந்த ஆதரவின்மையாலன்றோ சித்த வைத்தியம் கவனிப்பாரற்று முடங்கிற்று.

நல்லது போற்றும் குணம் இதுபோது மக்களிடையே தோன்றி ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. நமது சித்த வைத்தியத்திலும் நம்நாட்டு மூலிகைகளிலும் நம்பிக்கை ஏற்பட்டு அதனால் பயனடையத் தலைப்பட்டு உள்ளார்கள் மக்கள் என்ற இந்நிலையில் என் ஆராய்ச்சியிற் கண்ட முடிவுகளை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள மகிழ்ச்சியடைகின்றேன்.

நீரிழிவு நோய் இருவகைப்படும் என்பர். ஆங்கில மருத்துவர், சித்தர்கள் இருபது வகைகளைக் கண்டு இனம் பிரித்திருக்

கிருர்கள். இனிப்பு நீரிழிவு (Diabetes Mellitus) சுவையற்ற நீரிழிவு (Diabetes Inspidus) என்பன இருவகைகள்.

சுவையற்ற நீரிழிவு :- இது நடுவயதினருக்கே வரும். இந் நோய் கண்டவர் இரத்தத்திலிருந்து வரும் நீரை ஏற்கும் திறன் இல்லா சிறு நீரகங்களைப் (Kidneys) பெற்றவர். ஆதலின் சிறுநீர் மிகுதியாக இறங்கும். இவர்களுக்கு அடிக்கடி தாகம் உண்டாகும். சருமம் உலரும். முதுகு, கால் முதலிய உறுப்புக் களில் வலி உண்டாகும். சருமத்தில் அரிப்பு ஏற்படும். பசி குன்றும். உடல் மெலியும். (Coma) என்ற பெரு மயக்க நிலை உண்டாகலாம். சிலருக்கு மூளையில் கட்டி (Tumour) உண்டா கும். அறுவை சிகிச்சை இன்றியமையாதநிலை ஏற்படும். பிட்டுட்டரி சத்தை ஊசி குத்தல் (Injection) மூலம் செலுத்த குணமுண்டாகும். இந்தவகையான நீரிழிவு ஏற்படக் காரணம் பிட்டுட்டரி சுரப்பியின் ஒரு பாகமோ, நாளங்களோ சேத முறினும் இத்தகைய நீரிழிவு உண்டாகும். இந்த நோய் அரிதாகவே காணப்பெறும்.

மற்ருெருவகை நீரிழிவு இனிப்பு நீரிழிவு. நம் உறுப்புகள் தம் வயத்தனவாய் இயங்கவும், அவை திண்மையாக இருக்கவும், வளரவும் நம் உணவில் முக்கியமான உணவுகள் வேண்டும். கார்போஹைடிரேட்டுகளும் (Carbohydrates) கொழுப்புக்களும் (Fats) புரதங்களும் (Proteins) வைட்டமின்களும், தாது உப்புக் களும் வேண்டும். ஆனல் முதலிற் கூறிய மூன்றுமே மிகமிக முக்கியம். கார்போஹைடிரேட்டுகள் சரியாகப் பயன்படுத்தப்பட முடியவில்லையாளுல், புரதங்களும், கொழுப்புகளும் பயனற்றுப் போகும். கார்போஹைடிரேட்டுகள் அரிசி, கோதுமை, சர்க்கரை, கிழங்கு வகைகள் இவற்றிலிருந்தும், கொழுப்புச்சத்து வெண்ணெ, நெய், எண்ணெ முதலியவற்றினின்றும் புரதங்கள் பால், மோர், பாலடைக்கட்டிகள் முதலியவற்றினின்றும் பெறலாகும். உண்ட உணவு ஜீரணமாளுல் இதன் சத்து இரத்தத்தில் கலக்கிறது. நம் இரத்தத்தில் சர்க்கரை எப்போதும் இருக்கிறது. இந்த சர்க்கரைதான் நாம் தொழிலாற்றவும், உறுப்புக்களை ஆளவும் சக்தியைக் கொடுக்கிறது. இரத்தத்தில் உள்ள சர்க்கரை மாருத ஒரே அளவாக இருந்துவரும். இரத்தத்திலுள்ள சர்க் கரைச் சத்து கிளைக்கோஜன் என்ற பொருளாக மாறி ஈரலில் இருக்கும். எவ்வுறுப்பிற்குச் சர்க்கரை தேவையோ அங்கு இந்த கிளைக்கோஜன் சர்க்கரையாக மாறி துணைசெய்கிறது. இந்த சர்க்கரை எப்போது பயன்படுத்தப்படாமல் போகுமோ அப் போது ஏனைய உணவுகளும் பயனளிக்கா. ஈரலிலிருந்து கீட்டோன் என்று சொல்லக்கூடிய ஒரு பொருள் உற்பத்தியா

கிறது. இது உடலுக்கு வலிமையை ஊட்டுகிறது. இது அளவுக்குமீறி உற்பத்தியாகுமானால் கெடுதிகள் உண்டாகும். புத்தி சுவாதீனம் அற்றுப்போவதுடன் பெருமயக்கநிலை (Coma) ஏற்படும். நீரிழிவு நோய் தரும் துன்பம் ஏட்டிலடங்கா.

இந்த நோய், தான் தரும் துன்பங்களோடமையாது, வேறு பல நோய்கட்கும் மூலகாரணமாகும். நீரிழிவு நோய் உள்ளவர் கட்கு வேறு எந்த நோய் வந்தாலும் குணப்படுத்துவது சிரம சாத்தியம். நீரிழிவைச் சமனப்படுத்திப் பின்னர் உற்ற நோய்க்கு உறுமருந்தைக் கொடுத்தல்வேண்டும். உடல் வலி, சருமம் காய்தல், தாகம், வறட்சி, நீர்போதல், இருமல் இன்னோரன்ன இன்னல்களுக்கிடையே உணவில் கட்டுப்பாடு தானக வைத்துக் கொள்வது, எளிது. மருத்துவர் ஆணையின்கீழ்க் கட்டுப்பாடு வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் வேதனையைத்தரும். இதுதவிர இந்நோயால் என்ன ஆகுமோ என்ற அச்சம்.

இனி இந்த நோய் ஏற்படுவதன் காரணங்களைப் பார்ப் போம். கணையம் (Pancreas) என்ற உறுப்பில் (B cells of islets of Langerbans) லங்கர்ஹான்ஸ் தீவுகள் என்னும் பாகத்தில் 'பீ' உயிரணுக்கள் சரியானபடி வேலை செய்யாமல், சுரப்பிகள் போதுமான இன்ஸிலினை சுரக்காதுநின்ருல் இந்த நீரிழிவு ஏற்படும். போதுமான இன்சுலின் இல்லையானல் உடலின் ஆக்கவேலைக்கு இன்றியமையாது வேண்டப்படும் சர்க்கரையும் பயன்படுத்தமுடியாதுபோகும். இந்த இன்சுலின் முட்டையி லுள்ள அல்புமின்போன் ஒரு ஹார்மோனி (Harmone) இது கணையநீரோடு சேராமல் நேராக இரத்தத்தில் கலக்கும். இந்தப் பொருள் சுரக்காவிட்டால், சர்க்கரை அளவிற்கு மிஞ்சி இரத்தத் தில் ஓடி சிறுநீர்ச் சுரப்பிகள் வழியாக மூத்திரத்தில் வெளிச் சென்றுவிடும். நீரிழிவு ஆங்கே தோன்றும்.

உணவை சீரணிக்கவும், நீரிழிவின் அழிவு வேலையைத் தடுக் கவும் செயற்கை இன்ஸிலினை ஊசி மூலம் உடலிற் செலுத்தி நோயை எதிர்க்கத்தலைப்பட்டது ஆங்கில வைத்தியமுறை. இந்த செயற்கை இன்ஸிலினைக் கண்டுபிடித்தவர்கள் கனடாநாட்டு விஞ்ஞானிகளான F. G. பாண்டிங், C. H. பெண்ட். இதனைத் தூய்மை செய்யக்கூடிய சிறந்த முறையைக் கண்டவர் J. B. காலிப். இன்ஸிலினை ஊசிமூலம் குத்துவது தற்காலிகசாந்தியே. இதை அனுதினமும் குத்திக்கொள்ளவேண்டும். நாளடைவில் இன்ஸிலினுக்கு அடிமையாவதோடு இறுதிவரையில் மூத்திரப் பரீக்ஷையும், ஊசிகுத்தலுமாகவே வாழ்க்கை முடியும். சீர்கெட்ட கணையத்தை நேர்படச்செய்ய அது இன்ஸிலினைச் சுரக்கச்செய்ய இன்னும் வழி ஏற்படவில்லை. அந்தோ பரிதாபம் !

நீரிழிவு நோய் வேறு பல நோய்கட்கு மூலகாரணமாகும் என்று முன்னரே குறிப்பிடப்பட்டது. வயிற்றுப்போக்கு (Diarrohoea) க்ஷயம், வேண்டாத்தகாத மிகை தைராய்டு சுரப்பு (Hyperthyroidism) மேலும் பல நோய்கள் கண் பார்வைக்கு ஊறு செய்யும். இவற்றைப் பன்னி உரைக்கில் மகா பாரதமாம்.

நோய்பற்றிய ஆராய்ச்சியும் வரலாறும் இனி நம் கவனத்திற்குரியன. இவை நோயாளிகட்கு நேரடியாகப் பயன் ஒன்றும் தராது. ஆயினும், நீரிழிவு நோயாளன் இதன் விளைவுகளை அறிந்து வாழ்க்கையைச் சீர்செய்துகொள்ள உதவும் என்ற கருத்தானும் ஏனைய மருத்துவ முறைகளினும் சித்த வைத்திய முறை செய்துள்ள சாதனைகள் இன்னதென்றறிய வாய்ப்பு ஏற்படும் என்ற கருத்தானும் ஒருவாற்றால் இந்த வரலாற்றினை ஆராய்வோம். சித்த வைத்திய முறையில் விஞ்ஞான முன்னேற்றம் இதுபோது அமைந்திருந்தும் முன்னேற்றத்தைக் கனவுகூடக் காணமுடியாத அக்காலத்தில் இப்பிணி பற்றிய முடிவான கருத்தும், அதற்கான மருத்துவமும் ஏற்பட்டிருந்ததை எண்ணி வியக்காமல் இருக்கமுடியாது. ஐயகோ! நம்மவர் கவனக் குறைவும், மேனாட்டு நாகரீக ஈர்ப்பும், ஊசிகுத்திக்கொள்வதில் உள்ள மோகமும் நம்மை எல்லாம் 'வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுதவர்' கதையாக ஆட்டி வைத்து விட்டனவே!

(தொடரும்)

சிகிச்சை பெற்றவர்கள் விபரம்

இம்மாதம் நம் வைத்திய சாலையில் மருத்துவ சிகிச்சை பெற்றவர்கள் விபரம் ;-

ஆண்கள்	... ...	986
பெண்கள்	... ...	915
குழந்தைகள்	... ...	672
	ஆக மொத்தம்	2573

இம்மாதம் நோய் குணமானவர்கள் எழுதிய நற்சாட்சிப் பத்திரத்தில் ஒன்று இதனடியில் தரப்பட்டிருக்கிறது :-

எனது தமையனுரின் மருமகப்பிள்ளை K. R. கிருஷ்ணதாஸ் வயது 24. செங்கல்பட்டு ஜில்லா, மதுராந்தகம் தாலூகா, குரும்பிரை கிராமத்தில் வசிப்பவர். அவர் கடந்தமாதம் அதாவது நவம்பர் 11 ஆந் தேதி அதிக சுரத்துடன் படுத்துவிட்டார். அதன் காரணமாக கண் மஞ்சளாகி எவ்வித உணவும் உட்கொள்ள முடியாமல் மெலிந்து ஒருமாதகாலம் கஷ்டப்பட்டார். 27—11—66 முதல் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம் சித்த வைத்திய சாலையில் சிகிச்சைப் பெற்று மஞ்சட்காமாலை பூர்ணகுணம் பத்துநாட்களில் அடைந்துவிட்டார். ஏற்கனவே ஆங்கில வைத்தியரிடம் இருபதுநாட்கள் மருந்து சாப்பிட்டும் ஊசி மருந்து ஏற்றியும் சொஸ்தம் அடையவில்லை. சித்த வைத்தியம் நல்ல கைகண்ட பலன் என்பது, இந்த வியாதி குணம் அடைந்ததிலிருந்து தெரிந்துகொண்டேன். இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன் அவர்களுக்கு ஸ்ரீ வைத்தியநாதசுவாமி நீண்ட ஆயுளும், நல்ல திடகாத்திரமும் கொடுக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,

(S-d) B. Kuppuswamy,
Inspector H. R. & C. E. Adm. Dept.
Sirkali.

18—12—66.

குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 3 — 00 —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசிமடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B. A. B. L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

தென்கிழக்காசியாவில் திருவாசகமணி

கடந்த 1963—64 இல் பத்துமாத காலம் திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் தென்னுப்பிரிக்க நாட்டில் சைவத்தையும் தமிழையும் பரப்பி அருந்தொண்டாற்றி வந்துள்ளமை யாவரும் அறிந்ததொன்றே.

அதேபோல இப்போதும் 1966-வது ஆண்டில் எட்டு மாத காலம் மலேய நாட்டிலும். சிங்கப்பூரிலும் தீவிரமாகச் சுற்றுப் பிரயாணம் செய்து தமிழுக்கும் சைவத்துக்கும் தனிப்பெருந் தொண்டாற்றி இப்போது தாயகம் திரும்பியுள்ளார்.

இவர் அவ் இரு நாடுகளிலும் ஆற்றியுள்ள மொத்தச் சொற் பொழிவுகள் 130 ஆகும்.

அவற்றுள் 13 சொற்பொழிவுகள் இந்து சமயம். சைவ சித்தாந்தம், விவேகானந்தர் போன்ற பொருள்பற்றிக் கோலா லம்பூரிலும், பினங்கிலும், சிங்கப்பூரிலும் கேட்டோர் வியக்கும் வண்ணம் ஆங்கிலத்தில் இவரால் ஆற்றப்பட்டவையாகும்.

மற்ருெரு 14 சொற்பொழிவுகள், பெரியபுராணம், திருவாச கம், திருக்குறள், சைவ சித்தாந்தம் என்னும் தலைப்புக்களில் இவர் மலேயப் பல்கலைக் கழகத்தில். செய்த பிரசங்கங்கள் ஆகும். மேனுட்டு நாகரிகத்தில் ஊறித்திளைத்து இந்து மதத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாத தமிழ் மாணவர்களும் சீன, முஸ்லீம் மாணவர்களும் இவற்றைச் சுவைத்துக் கேட்டுப் பாராட்டிப் பயன் பெற்றனர்.

மலேசிய வானொலியிலும் சிங்கப்பூர் வானொலியிலுமாகத் திருவாசகமணி ஒலிபரப்பிய மொத்தச் சொற்பொழிவுகள் 25 ஆகும். அவையனைத்தும் பெரியபுராணம், திருவாசகம், திருக்குறள் போன்ற சைவ நூல்களைப் பற்றியனவே ஆகும். இதில் குறிப்பிடத்தக்க விசேஷ நிகழ்ச்சி ஒன்றுண்டு. திருவாசக மணி மகாமாரியம்மன் கோவிலில் நிகழ்த்தி வந்த பெரிய புராணத் தொடர்ச் சொற்பொழிவுகள் அனைத்தையும் ரேடியோ மலேசியா அவ்வப்போது பதிவு செய்துகொண்டு அவற்றை ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை யன்று காலை ஏழு மணிக்கு ஒலிபரப்பி வருகின்றது என்பதுவே அவ்விசேஷம்.

இத்துடன் இரு நாடுகளிலும் மொத்தம் 9 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இவர் பங்குகொண்டுள்ளார். பொதுவாக, இது வரை அந்நாடுகளுக்குச் சென்று பிரசாரம் செய்தவர்களுள்ளே இவர் சைவ சமய நுணுக்கங்களை அனுபவபூர்வமாகவும் அனைவர் மனத்திலும் ஆழப்பதியுமாறும் விளக்கிப் பேசியுள்ளார் என்பது அந்நாட்டு மக்களின் உறுதியானகருத்து.

பொன்னுடைகளும், புதுப்பட்டங்களும்

திருவாசகமணியின் இணையற்ற ஆங்கில மொழி பெயர்ப்பாகிய திருக்குறள் பிரதியை அந்நாடுகளின் பெருந்தலைவர்கள் ஒருசிலருக்கு அவர் பரிசாக வழங்கிவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறு திருக்குறட் பரிசு பெற்றவர்களுள் தலையாயவர்கள், மலேசியப் பிரதமர் துங்கு அப்துல்ரஹ்மான், பினங்கு முதல் அமைச்சர், மலேய நாட்டுத்தமிழ் அமைச்சர் திரு. ராஜரத்தினம், முதலியோர் ஆவர்.

திருவாசகமணியின் சீரிய சைவத் தமிழ்த் தொண்டினைப் பாராட்டிக் கோலாலம்பூரில் மாபெரும் கூட்டம் ஒன்றில், மந்திரி மாணிக்கவாசகம் அவர்கள் திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கட்குப் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார்.

கோலாலம்பூர் மகாமாரியம்மன் மீது தம்மால் பாடப்பெற்ற நூல் ஒன்றினை அரங்கேற்றிய அமயம் திருவாசகமணி அவர்கள் மந்திரி டான் ஸ்ரீ வி. தி. சம்பந்தன் அவர்களால் 'ஓம்' பொறிக்கப்பெற்ற பொன் மோதிரம் ஒன்று அணிவிக்கப் பெற்றார்.

பினங்கு நகர மக்கள் சார்பில் 28—8—66ல் நடத்தப்பெற்ற பாராட்டுக் கூட்டம் ஒன்றில், அவ்வூர்த் தமிழ்த் தலைவர் திருவள்ளுவமணி, வள்ளல், திரு. ரெங்கசாமி பிள்ளையவர்கள் திருவாசகமணிக்குப் பொன்னுடை போர்த்தியதுடன் 'நாவலர் மணி' என்றதொரு புதுப்பட்டத்தையும் வழங்கினார்.

சிங்கப்பூரில் உள்ள, "தமிழ் முரசு"த் தினத்தாளின் ஆசிரியர் 'தமிழ்வேள்' திரு. கோ. சாரங்கபாணியவர்கள், தமது தலைமையின்கீழ் இயங்கும் "தமிழர் பிரநிதித்துவ சபை" யின் சார்பாக நடத்திய தேநீர் விருந்துக் கூட்டம் ஒன்றில், திருவாசகமணியின் அளப்பரும் தமிழ்த் தொண்டினைப்

கன்னியாகுமரியில்:

ஸ்ரீ கன்னியாகுமரி அம்பாள்

மயிலாப்பூரில்:

ஸ்ரீ கற்பகாம்பாள்.

காஞ்சிபுரத்தில்:

ஸ்ரீ காமட்சியம்மை

திருக்கடவூரில்:

ஸ்ரீ அபிராமி அம்பாள்

வேலூரில்:



ஸ்ரீ தையல்நாயகி அம்பாள்

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி

கொறுக்கையில் :

ஸ்ரீ ஞானம்பாள்

திருமையாதீனத்தில்:



ஸ்ரீ வனதுர்க்காதேவி

பாராட்டிப் பட்டாடையொன்று போர்த்தியதோடு, அவரது வரப்போகும் பெரிய புராண ஆங்கில மொழிபெயர்ப்புக்கு இப்போதே வாழ்த்தும் வரவேற்பும் வழங்கினர்.

மலேசியா முதலிய இடங்களுக்குச் செல்லும்போது தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் முதலாய ஆசாரியரது ஆசிகள் முழுவதையும் பெற்றுச்சென்ற திருவாசகமணி, மலேயாவிலிருந்து திரும்பிவந்தவுடனேயே திருச்சியில் நடைபெற்ற சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 61வது ஆண்டு விழாவின்போது, திரு. காசிநாத துரையால் பொன்னுடை போர்த்தப்பெற்றதோடு, ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள், திரு. ஜி. எம். முத்துசாமி பிள்ளை, திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராஜப் பிள்ளை முதலியோரால் பாராட்டவும் பெற்றார்.

மதிப்புரை :

தடைகளும் விடைகளும்

ஆசிரியர் : புலவர் மாமணி, சித்தாந்த வித்தகர், உயர்திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார், மலேயா ; வெளியீடு : மறைமலையடிகள் மன்றம், புன்செய்ப் புளியம்பட்டி (கோவை மாவட்டம்) விலை 1—50.

சமயப் பிரசாரம் செய்பவர்களுக்கு, அவ்வச் சமயத் தொடர்பான அறிவு விளக்கம் பெரிதும் வேண்டும். அவ்வாறு விளக்கம்பெற வினவும் வினாக்களுக்குத் தக்க விடையளிக்கும் திறனும் அப்பிரசாரகர்களுக்குப் பெரிதும் வேண்டும். இந்நூலில் திரு. செட்டியாரவர்கள் சமயத் தொடர்பான பல வினாக்களுக்கு, (அருளறம், வினை-ஊழ், சாமியாடி - பேய்கள், வழிபாடு, புறச்சமயங்கள், புராணங்கள் பற்றியவை) நன்கு விடையளித்திருக்கிறார். ஆய்வு உணர்வுடன் விடைகள் தெளிவாக உள்ளன. வினாக்களும் பண்பு வழுவா நிலையில் எழுப்பப்பட்டுள்ளன. சமய விளக்க நூல்களில் இத்தகு நூல்கள் ஒரு புதிய உத்தியினை (method) விளக்கின்றன. ஆசிரியரின் முயற்சி பாராட்டிற்குரியது. மறைமலையடிகள் மன்றத்தினர் நுட்பமாக வினவியுள்ள வினாக்களே இவ்வரிய நூல் எழுதுதற்குத் தக்க காரணமாகும். வினவியதுடன் அத்தடை விடைகளை நூலாக வெளிவரச் செய்ததும் பாராட்டற்குரியது. இளைஞர் உலகிற்கு இன்றியமையாத இந்நூலை வேண்டுவோர் மன்றத்திற்கு எழுதிப்பெற்றுப் பயனுறலாம். —" வேலன் "

அரியும் கரியும்

—[சொ. சி.]—

இறைவன் அடைதற்கு அரிய பரம்பொருள்; அவனை உணர்தற்கும் உயிர்களின் சிற்றறிவுக்கு இயலவில்லை. 'உணர்ந் தார்க்கே உணர்வு அரியோன்' ஆக அவன் உள்ளான் எனில், மற்றைய சிற்றுயிர்கள் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? அவனது அரியநிலையை விளக்குவதே அவனது விசுவரூபப் பெருவரலாறு. 'யாம் கடவுள், யாம் கடவுள்' என்று அகந்தை யுற்ற அரிக்கும் பிரமனுக்கும் அவன் காணுதவனய் நின்று பேரொளிப் பிழம்பாகித் திகழ்ந்தனன். பட்டினத்தார், அம் முதற்பொருளை

'அரி தேடியறியா ஒருமுதல்'

என்றுரைக்கின்றார். தேடியும் அறிய இயலவில்லையென்று, முயற்சியின் அளவையும் குறித்தார். அதற்குக் காரணம் அவன் ஒப்பற்ற முதற்பொருள் ஆக இருப்பதே என்று விளக்குவாராக 'ஒருமுதல்' என்றார். திருமாலும் காத்தற்கடவுளாக நின்று அருஞ்செயல் புரியும் அருநிலை உடையவன் ஆதலின் 'அரிய அரி' என்று அடைமொழி கொடுத்துப் பாடுகின்றார்.

அத்தகைய திருமாலும் தேடியறிய மாட்டாத் திருவடி உடைய பரம்பொருள் என்று கூறுவாராய் 'ஒருமுதல்' என்று வற்புறுத்துகின்றார். அந்த முதற்பொருள் மேலான ஒளியுரு வாய் விளங்குவது. அவ்வொளியைத் தாமும் கண்டு இன்புற்றுத் தோயும் திருவருள் அநுபவம் உடைய பெரியோர் ஆதலின், அவருடைய

'பரஞ்சுடரை'

எனும் தொகை ஆழப்பொருள் உடையதாகின்றது. அடுத்து அந்தப் பரஞ்சுடர் வடிவாகிய சிவபிரானைப் போற்றுவதானல் என்ன வேண்டும்? தூய அன்பே வேண்டும். அந்தத் தூய அன்பு ஒன்றே அவனுக்கு நாம் புரியத்தக்க மெய்யான வழிபாடு. அந்த அன்பிற்குப் பலபெயர்கள் உள்ளனவாயினும் இங்கே அடிகள் மேற்கொள்வது 'பரிவு' என்ற ஒரு சொல்லையே யாகும்.

'பரிவுடனே போற்றும் பரஞ்சுடரை'

இத்தகு ஒருதனி முதலாகவும், ஒளிப்பிழம்பாகவும் உள்ள பிரானைப் போற்றுமல் உலகமையலிற் சிக்கிக் கிடப்போர் பல்லாயிரவர். அவர்கள் நிலையைத் தம்மேலிட்டுக் கொண்டு உரைப்பாராக, அடிகள் கரிய பெரிய வாழ்வை நம்பிக் காமத்தில் அழுந்தியதாக அடுத்துப் பாடுகின்றுர். கருமை தீமை விளக்கமாகக் கருதப்படுதலின், 'கரிய வாழ்வு' என்று கூறுவது மிகப் பொருந்துவதாக உள்ளது.

இனி, இவ்வாறு உலகவாழ்வை நம்பிக் காமவின்பத்திற் கிடக்கும் நிலைக்கு அடிகள் உரைக்கும் உவமை நலம் பல உடையதாகத் திகழ்கின்றது.

காட்டிலே தன் போக்கில் திரிந்து இன்புறுகின்ற யானை ஒன்று கொடிய சிங்கம் ஒன்றின் வாயிற்பட்டுத் துன்புற்று இறத்தலைப் போல என்பது அடிகளின் உவமை.

"அரிவாயிற் பட்ட கரியதுபோல ஆனேன்"

இவ்விடத்து, கொடிய காமத்தை உயிரை மாய்க்கும் இழி பண்பைச் சிங்கத்திற்கும் துன்புற்றுச்சாகும் உயிரை யானைக்கும் உவமையாகச் சொல்லியது, காமக் கொடுமையையும், உயிரின் எளிமையையும், எடுத்து விளக்குவதாக உள்ளது. உலக வாழ்வை நம்பிக் கேடுபல அடையும் உயிர்களைப் பார்த்துக் கருணை நலம் தோன்ற அடிகள் பாடும் இப்பாடல் சிந்திக்கச் சிந்திக்கப் பெருநலங்கள் உடையதாகும்.

யானை சிங்கத்தின் வாய்ப்படாது தப்புதல் போல, உயிர் காமவின்பத்தின் வாய்ப்பட்டுத் துயருறலாகாது என்ற விழுமிய நோக்கத்தை இக் கவிதை கற்பிக்கின்றது. இக் கவிதையின் மொழிகளோ இழும் என்னும் இன்னோசை உடையனவாய் உள்ளன. நுவலும் பொருளோ 'விழுமிய' தாக உள்ளது. ஒரு மெய்யான கவிதை இவ்விரண்டு தலை நலங்களும் எய்திச் சிறப்பதாக இருத்தல் வேண்டும் என்ற வரையறைக் கேற்ப அமைந்துள்ள பட்டினத்தாரின் இவ்வழகுறும் பாடல் பின் வருவதாகும் :

"அரியவரிதேடி யறியா
வொருமுதலைப்
பரிவுடனே போற்றும்
பரஞ்சுடரைப் போற்றுமல்
கரியபெரு வாழ்வை நம்பிக்
காமத் தழுந்தியே
அரிவாயிற் பட்ட
கரியது போலானேனே.

நவசக்திகளின் வழிபாடு

சிவாகம வித்துவான்,

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

உலகில் தோன்றியுள்ள பலவித பிறப்புக்களுள் மனிதனுகப் பிறப்பது மிகச் சிறந்தது. மற்ற பிறவிகள் நன்மை, தீமை என்பவைகளைத் தெரிந்துகொள்ளாமல் வாழ்கின்றன. பசி வந்தபோது உண்ணுகின்றன. களைப்பு வந்தபோது தூங்குகின்றன. இம்மை மறுமைக்கு வேண்டியதைப்பற்றிச் சிந்திப்பதில்லை. அதற்கேற்ற பகுத்தறிவில்லை. இத்தகைய மற்ற பிறவிகளுக்கு இல்லாத பகுத்தறிவு இம்மனிதனுக்கு இருக்கிறது. இதனுல் இவனுக்கு ஒரு பெருமை. உலகத்தில் கிடைக்க அரிதாக உள்ளது மூன்று. அவை மனிதப்பிறவி, மோக்ஷ இச்சை, மகான்களுடன் சேர்ந்து வாழுதல் என்பது ஒரு முதியோரின் வாக்கு.

சுகம் உண்டாகட்டும். துக்கம் உண்டாகக் கூடாது என்றுதான் எல்லோராலும் விரும்பப்படுகிறது. ஒரு மனிதனுடைய முயற்சியும் இருவகையில் எழும்புகிறது. ஒன்று இன்பத்தைப் பெற; மற்றொன்று துன்பத்தை நீக்க; இன்பத்தைப் பெறுவது மாத்திரம் போதாது. அது இன்பமாக ஆகாது. துன்பத்தை நீக்குவதும் இன்பம்தான். இந்த இரண்டும் ஒருசேரச் சேர்ந்த இன்பந்தான் இன்பமாகும்.

இத்தகைய துன்பநீக்கத்தையும் இன்பப் பேற்றையும் பெற மனிதன் தனது பகுத்தறிவைக்கொண்டு முயற்சிசெய்கிறுன். இன்பம் பெறுகிறுன். பெரு முயற்சி செய்தும் சில இன்பங்கள் பெற முடியாமற் போகிறது. சில சிறு முயற்சியால் அடையப் படுகிறது. இது மனிதனின் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி. அந்த சக்திதான் ஊழ்வினையின் சக்தி.

வினையின் வன்மையை வெல்லவேண்டும். அவ்வாறு வென்றால் தடையற்ற இன்பம் கிடைக்கும். இத்தகைய தடை இல்லாத இன்பத்தைப் பெற இறைவனின் அருள் வேண்டும்.

அன்பினால் இன்பத்தைப் பெறலாம். இன்பமும் அன்பும் காரணகாரியத் தொடர்புடையது. இறைவனே இன்ப அன்பு வடிவன்.

உலகிற்கு முழுமுதற் கடவுளாய் விளங்குபவர் அம்மையப்பரான சிவபெருமான். அவனை விட்டுப் பிரியாது அவனுடனாய் நிற்கும் அருள் அம்மை எனக் கூறப்படுகிறது. அந்த சக்தியின் சேர்க்கையினால் சிவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழிலைச் செய்கிறார். அந்த சக்தியின் சேர்க்கையில்லையேல் சிவன் ஒன்றும் செய்ய முடியாதவனாகிறான்.

பாவகஸ்ய உஷ்ணா தேவேயம் பாஸ்கரஸ்யேவ தீதிதி:,
சந்த்ரஸ்ய சந்த்ரிகேவேயம் சிவஸ்ய ஸஹஜா சிவா.

— சிவாகமம்.

அக்னிக்குச்சூடுபோலவும், தினகரனுக்குக் காந்தி போலவும், சந்திரனுக்கு சந்திரிகை போலவும் சிவபெருமானுக்கு இணை பிரியாமல் கூடத் தோன்றியவள் பராசக்தி. இந்த பராசக்தியானவள்பொதுவகையால்ஒன்றாய் வியாபாரபேதத்தால் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என்ற பேதமுடையவளாய்க் காணப்படுகிறாள்.

ஒன்று முதல் ஒன்பதினுள் உலகமே அடங்கியுள்ளது எனக் கூறலாம்.

(தொடரும்)

செய்திகள்

தருமையாதீனத் திருக்கோயில்களில்

பாவை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத் திருக்கோயில்களில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் ஆணையின் வண்ணம் பாவை மாநாடுகள் நடைபெற்றன. பாவை மாநாட்டில் அறிஞர்கள் பலர் கலந்துகொண்டு பாவைப் பாடல்களின் அரிய கருத்துக்களை விளக்கினார்கள். அன்பர்கள் பலர் அங்காங்கும் கேட்டு மகிழ்ந்தனர். மாநாடுகள் மாலை 6-மணிக்குத் தொடங்கி நடைபெற்றன. மாநாட்டின்போது பாவைப்பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன.

பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் பாவைச் சொற்பொழிவு 8—1—67 ஞாயிற்றுக்கிழமை வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி, (திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி தமிழ்ப்பேராசிரியர்) அவர்களால் 'திருவெம்பாவை' என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்டது.

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நிகழ்ந்த பாவை மாநாட்டில் 7—1—67 சனிக்கிழமை திரு. சி. இராமலிங்கனார் எம். ஏ., (பூம்புகார் பண்பாட்டுக் கல்லூரி முதல்வர்) அவர்கள் "பாவைச் சிறப்பு" என்ற பொருளிலும், 8—1—67 ஞாயிற்றுக்கிழமை நாகை, தேசீய உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் "திருவெம்பாவை" என்ற பொருளிலும் சொற்பெருக்காற்றினார்கள்.

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் நிகழ்ந்த பாவைமாநாட்டில் 8-1-67 ஞாயிற்றுக்கிழமை வித்துவான் திரு. மு. இரத்தினதேசிகர் அவர்கள், (திருவாரூர், உயர்பள்ளித் தமிழாசிரியர்,) "திருவெம்பாவை" என்ற பொருளிலும், 9—1—67 திங்கட்கிழமை சென்னை குகஸ்ரீ. ரசபதி அவர்கள் "திருப்பள்ளியெழுச்சி" என்ற பொருளிலும் சொற்பொழிவாற்றினார்கள்.

குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நிகழ்ந்த பாவை மாநாட்டில் 7—1—67 சனிக்கிழமை திருவையாறு, தருமையாதீனப் புலவர், பண்டித வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் "திருவெம்பாவை" என்ற பொருளிலும், 8—1—67 ஞாயிற்றுக்கிழமை திருவையாறு செய்தியாளர் சமயப்பிரசாரகர், திரு. ஜி. தனவேல் பிள்ளை அவர்கள் "திருப்பள்ளியெழுச்சி" என்ற பொருளிலும் சொற்பெருக்காற்றினார்கள்.

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நிகழ்ந்த பாவை மாநாட்டில் 7—1—67 சனிக்கிழமை திருவையாறு செய்தியாளர், சமயப்பிரசாரகர், திரு. ஜி. தனவேல் பிள்ளை அவர்கள் "திருப்பள்ளியெழுச்சி" என்ற பொருளிலும், 8—1—67 ஞாயிற்றுக்கிழமை சென்னை, குகஸ்ரீ. ரசபதி அவர்கள் "திருவெம்பாவை" என்ற பொருளிலும் சொற்பெருக்காற்றினார்கள்.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நிகழ்ந்த பாவை மாநாட்டில் 7—1—67 சனிக்கிழமை திருப்பனந்தாள், செந்தமிழ்க்கல்லூரி முதல்வர், சிவநெறிச்செல்வர், வித்துவான், திரு. கே. எம் வேங்கடராமையா எம் ஏ. அவர்கள் "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்பிலும், 8—1—67 ஞாயிற்றுக்கிழமை மாயூரம், தருமையாதீனப் புலவர், மகாவித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் "திருவெம்பாவை" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள்.

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நிகழ்ந்த பாவை மாநாட்டில் 6—1—67 வெள்ளிக்கிழமை பூம்புகார் பண்பாட்டுக்கல்லூரி முதல்வர், திரு. சி. இராமலிங்கனார் எம். ஏ., அவர்கள் "திருவெம்பாவை" என்ற தலைப்பிலும் 7—1—67 சனிக்கிழமை நாகை தேசீயஉயர்பள்ளித்தமிழாசிரியர், தருமையாதீனப் புலவர், வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள்.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் நிகழ்ந்த பாவை மாநாட்டில் 11—1—67 புதன்கிழமை திருச்சிராப்பள்ளி திருவாசகமணி, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்கள் "திருப்பாவை" என்ற பொருளிலும், 12—1—67 வியாழக்கிழமை காஞ்சிபுரம், தருமையாதீனப்புலவர், திரு. க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ., எல். டி. அவர்கள் "திருவெம்பாவை"

என்ற பொருளிலும், சிதம்பரம் பச்சையப்பன் உயர்பள்ளி, வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்பிலும் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் நிகழ்ந்த பாவை மாநாட்டில் 11—1—67 புதன்கிழமை காஞ்சிபுரம், தருமையாதீனப் புலவர், திரு. க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ , எல். டி , அவர்கள் "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்பிலும், 12—1—67 வியாழக்கிழமை திருச்சிராப்பள்ளி, திருவாசகமணி, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல். அவர்கள் "திருவெம்பாவை" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள். அன்பர்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய வழிபாட்டுக் குழுவினரின்

சோழநாட்டுக் காவிரித் தென்கரை கிழக்குப் பகுதித் தலயாத்திரை

25—12—66 இல் திருவாவடுதுறை ஸ்ரீ மாசிலாமணீசர் திருக்கோயில், திருவாவடுதுறை ஆதீன மடாலயம், திருக்கோழம்பம் ஸ்ரீ கோகிலேசுவரர் திருக்கோயில், குத்தாலம் (திருத்துருத்தி) ஸ்ரீ உக்தவேதீசுவரர் திருக்கோயில், திருவழுந்தூர் (தேரழுந்தூர்) ஸ்ரீ வேதபுரீசர் திருக்கோயில், ஸ்ரீ ஆமருவியப்பர் திருக்கோயில், கம்பர்மேடு, மூவலூர் ஸ்ரீ மார்க்கசகாயேசுவரர் திருக்கோயில், ஸ்ரீ சம்பந்தர் திருக்கோயில். ஸ்ரீ ஆலந்துறைநாதர் திருக்கோயில், மாயூரம் ஸ்ரீ மாயூரநாதசுவாமி திருக்கோயில், மாயூரம் - குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகியவற்றில் வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. திருவாவடுதுறையில் மேற்படி ஆதீன உத்தரவுப்படி மேற்பார்வையாளர் திரு. சுப்பிரமணியப் பிள்ளை குழுவினரை வரவேற்று ஆலய வழிபாட்டையும், ஆதீன மடாலயத்தில் உள்ள ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகள், திருமாளிகைத்தேவர், மடாலயப் பூசைமடம் வழிபாட்டையும் உடனிருந்து சிறப்புற நிகழ்த்திவைத்துக் குழுவினருக்குச் சிற்றுண்டி அளித்து உபசரித்தார்கள். திருக்கோழம்பத்தில் அறங்காவலர்களும். சிவாசாரியரும், ஊர்மக்களும் வரவேற்று வழிபாட்டை நன்கு நடத்திவைத்து நீர்மோர் அளித்து உபசரித்தார்கள். இத்திருக்கோயில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. திருப்பணி செய்தல் மிகவும் இன்றியமையாததாகும். குத்தாலத்தில் தருமையாதீன

உத்தரவுப்படி மேற்பார்வையாளர் திரு. சுந்தரேசம் பிள்ளை குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்து மாகேஸ்வரபூசையும் செய்து உபசரித்தார்கள். திருவழுந்தூர் ஸ்ரீ வேதபுரீசுவரர் ஆலயத்தில் அறங்காவலர்களும், சிவாசாரியார்களும், ஊர்மக்களும் ஆர்வத்துடன் பூர்ணகும்பம் கொடுத்துக் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தனர். ஸ்ரீ ஆமருவி அப்பர் ஆலயத்தில் பட்டாச்சாரியர்கள் குழுவினரை வரவேற்று சிரத்தையுடன் வழிபாட்டை நடத்திவைத்தார்கள். மூவலூர் ஸ்ரீ மார்க்கசகாயேசுவரர் ஆலயத்தில் நிர்வாக அதிகாரி குழுவினரை வரவேற்று வழிபாட்டை நன்கு நடத்திவைத்தார்கள். மூவலூர் ஸ்ரீ திருஞானசம்பந்தர் வழிபட்டதால் சம்பந்தர்கோயில் என்று வழங்குகிறது. இவ்வாலய நிர்வாக அதிகாரியும், சிவாசாரியரும் ஊக்கமுடன் குழுவினரை வரவேற்று வழிபாடு செய்வித்தார்கள். ஸ்ரீ ஆலந்துறைநாதர் ஆலயத்தில் மேற்படி நிர்வாக அதிகாரியும், சிவாசாரியார்களும் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தார்கள். மாயூரம் ஸ்ரீ மாயூரநாதசுவாமி ஆலயத்தில் திருவாவடுதுறை ஆதீன உத்தரவுப்படி ஆலய நிர்வாகிகளும், குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் தருமையாதீனம் உத்தரவுப்படி மேற்பார்வையாளர், திரு. K. குஞ்சிதபாதம் பிள்ளையும், சிவாசாரியார்களும் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தனர். குமரக்கட்டளையில் குழுவினருக்குச் சிற்றுண்டி அளித்து உபசரித்தனர்.

26—12—66இல் தருமபுர ஆதீனம் ஸ்ரீ தருமபுரீஸ்வரர் திருக்கோயில், ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் திருக்கோயில் (ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருமூர்த்த ஆலயம்) ஆதீனத்தில் உள்ள ஸ்ரீ சொக்கநாதர் பூசை மடாலயம். ஸ்ரீ ஆனந்தபரவசர் குருமூர்த்த ஆலயம், திருவிளநகர் ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் திருக்கோயில் ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோயில், திருப்பறியலூர் வீரட்டம் ஸ்ரீ வீரட்டேசுவரர் திருக்கோயில், திருநனிபள்ளி, ஸ்ரீ நற்றுணையப்பர் திருக்கோயில், திருச்செம்பொன்பள்ளி (செம்பொனார்கோயில்) ஸ்ரீ சொர்ணபுரீசர் திருக்கோயில், ஆக்கூர், ஸ்ரீ தான்தோன்றீசர் திருக்கோயில், ஸ்ரீ இராஜகோபாலசுவாமி திருக்கோயில் ஆகியவற்றில் வழிபாடும் சமயப் பிரசாரமும் சிறப்பாக நடைபெற்றன. தருமையாதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் குழுவினருக்குத் திருநீறளித்துப் பாவைப்பாடல் புத்தகமும், ஸ்ரீ குருஞானசம்பந்தர் வரலாற்றுப் புத்தகமும் அருளி அருளாசி வழங்கினார்கள்.

பதின்மூன்ருவது ஆண்டு நிறைவு விழா.

சென்னை, தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் பதின்மூன்ருவது ஆண்டு நிறைவு விழா நிலைய மன்றத்தில் 21—12—66 மாலை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கனம் ஆர். சதாசிவம் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் தருமபுரம் திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வணக்கம் பாடிஞர். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நிகழ்த்திஞர்கள். நிகழ்த்துகையில் நிலையத்தில் நடைபெறும் பணிகளையும் நிலையம் செய்துவரும் பணிகளையும் விளக்கி, தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அனுப்பியருளிய ஆசிச் செய்தியையும், மற்றும் பல மன்றங்களிலிருந்து வந்த வாழ்த்துக்களையும் வாசித்தார்கள்.

சென்னை, மாநில இந்து அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கள் ஆண்டு விழாவைத் தொடங்கி வைத்து அரிய உரை நிகழ்த்திஞர்கள். தருமையாதீனப் புலவர் திரு. க. வச்சிரவேல் முதலியாரவர்கள் ஆண்டுவிழாப் பேருரை நிகழ்த்திஞர்கள். நிகழ்த்தும் போது உலகப்பொருள் அனைத்தும் இறைவன் உடைமைகளே. அவற்றை நம்முடைய வினைக்கீடாக அனுபவிக்கலாம். அவற்றிற்கும், நமக்கும் உள்ள தொடர்பு கோயில் சொத்திற்கும், அறங்காவலர்கட்கும் உள்ள தொடர்பு எத்தகையதோ அது போன்றதே. இதனை ஈசாவாஸ்யம் என்னும் உபநிஷத் உரைக்கின்றது. பொது உடைமைத் தத்துவத்தை பன்னூறு ஆண்டுகட்கு முன்பே நமது சமயம் உணர்த்தியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.

நிலையத் திருமுறை வகுப்பு மாணவியர் தேவாரத் திருமுறை பற்றிய உரையாடலை உணர்ச்சியூட்டக்கூடிய வகையில் நிகழ்த்திஞர்கள்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கனம், ஆர். சதாசிவம் அவர்கள் கருத்துவளம் நிறைந்த தலைமை உரை நிகழ்த்திஞர்கள். எட்டு மாத காலமாக மலேயாவில் சுற்றுப்பயணம் செய்து சமயப் பணியாற்றித் தமிழகம் வந்துள்ள திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் ''மலேயாவில் சமயப்பணி'' என்பதுபற்றி அனுபவ உரையாற்றிஞர்கள். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றியுரை நவின்ருர்கள். திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வாழ்த்துப் பாடிஞர்.

நீதிபதி. கனம். R. சதாசிவம் அவர்கள்

தலைமை உரை

தம்பிரான் சுவாமிகளவர்களே! ஆணையரவர்களே! அன்பர்களே! தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையப் பதின்மூன்றுவதாண்டு நிறைவு விழாவிற்குத் தலைமை வகிக்க அழைத்தமைக்கு மகிழ்ச்சி. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் எனக்கும் ஆசி வழங்கியிருப்பதற்குப் பெருமைப்படுகிறேன். சிறுவர் சிறுமியர்களுக்கு நமது சமயக் கருத்துக்களைப் புகட்டி விட வேண்டும். வயது வந்தபிறகு சொல்வதைவிட இது மேலானது. இப்பிரசார நிலையத்தோடு மக்கள் அதிகமாகத் தொடர்புகொள்ள வேண்டும். நம்முடைய மதத்திற்கும் பிரசாரம் அவசியமா? பிரசாரம் முன்பு இருந்ததா? இல்லையா? இருந்தது, சமய குரவர் நால்வர்களின் வாழ்வே பிரசாரம்தான். அவர்கள் அருளிய தேவார திருவாசகங்கள் சிறந்த பிரசாரமாகும்.

சட்டக் கல்லூரியில் நான் படிக்கும்போது உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வெளியிட்டது. மேல்நாட்டுக் கிறித்தவ அம்மையார் ஒருவர் இங்கு வந்து இந்துவானார்கள். இந்துவாகப் பிறவாதவர்கள் இந்துவாகக் கூடுமா என்பது பற்றிய உயர்நீதிமன்ற வழக்கில் பிறப்பிலேயே இந்துவாகப் பிறக்காவிட்டாலும் இந்துவாக முடியும் என்று தீர்ப்புக்கொடுத்தார்கள். பிற மதத்திலிருந்து நம் மதத்தில் சேர்ப்பதற்காக அல்ல நமது பிரசாரம், நம் மதத்தவர்கள் வேறு மதத்துக்குப் போகாமல் இருப்பதற்காகவேதான், நான் பெரியபுராணத்தைப் படித்து வருவதைப் பற்றி சுவாமிகள் பெருமையாகச் சொன்னுர்கள். ஐம்பது வயது வரை பெரியபுராணத்தைக் கருத்தூன்றிப் படிக்க இயலாமல் போனதை எண்ணும்போது எனக்குச் சிறுமையாகவே தோன்றுகிறது.

சிறு வயதிலேயே பிள்ளைகளிடம் பிரசாரம் செய்யப்பட்டால் இந்து மதம் மக்களிடையே வளர்ச்சியடையும். மக்கள் பயனடைவார்கள். மக்களைக் கூட்டுவதற்கு நாடகங்கள் நடத்தலாம். நாடகம் என்றுல் மக்கள் அதிகம் வருவார்கள். தருமையாதீன மகாசந்நிதானபவர்கள், தேவாரத் திருமுறைகள் ஏழிற்கும் உரை எழுதச்செய்து வெளியிட்டுள்ளார்கள். இசையரசு, எம். எம். தண்டபாணி தேசிகரைக் கொண்டு பாடச்செய்து தேவாரப் பாடல்களைப் பண்முறையோடு இசைத்தட்டுக்கள்

வெளியிட்டுள்ளார்கள். நான் வேலூரில் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தபோது சீகாழி தரிசனத்துக்குச் சென்றேன். அப்பொழுது தேவாரம் இசைத்தட்டின் மூலம் ஒலித்ததைக் கேட்டு மகிழ்ந்தேன். ஆதீனத்தார் முன்மாதிரியாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள். இப்பொழுது அரசாங்கச் சார்பில் வெளியிட்டுள்ள இசைத்தட்டுக்களும் நன்றாக அமைந்துள்ளன. நமது சமயத்தில் எந்தஎந்த நூல்களை வேதமாகக் கருதவேண்டும் என்று வச்சிரவேல் முதலியார் சொன்னார்கள். நமது மதவேத நூல்களில் நமக்கு நம்பிக்கை வேண்டும். நம்பிக்கை இல்லையானால் பயனில்லை. கிறித்தவர்கள் தமது வேதமாகிய பைபிளில் நம்பிக்கை இல்லாதவர்களை நீக்கிவிடுவார்கள். குரானில் நம்பிக்கை இல்லாதவர்களை முஸ்லீம்கள் தம்மவராக ஒத்துக் கொள்ளமாட்டார்கள்.

நமது மதத்தத்துவங்கள் பற்றிப் புரியாமலே குறைகூறுகிறவர்கள் பலர், திருநீறு எதற்கு இட்டுக்கொள்கிறோம். விடியற்காலையில் ஏன் எழுந்திருக்க வேண்டும். இதற்கெல்லாம் விளக்கம் சொன்னால் மக்கள் திருந்தி சமய நம்பிக்கைகொள்வார்கள்.

ஐந்தாண்டுகட்கு முன்னர் ஆதீனத்துக்குச் சென்றபோது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் எனக்கு இந்துமத பாலபாடம் என்ற நூல் ஒன்று கொடுத்தார்கள். எனக்கு வெட்கமாக இருந்தது. நமக்குப் பாலபாடம் கொடுக்கிறார்களே என்று எண்ணினேன். பிறகு படித்துப்பார்த்தபோது பெரியவர்கட்குத் தெரியாத விஷயங்கள் மதத்தத்துவங்கள் பல இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன்.

மடம். ஆலயம் இரண்டும் நமது இந்து சமயத்தில் இரு கண்கள், இவை நமது வாழ்வைச் செம்மைப் படுத்துகின்றன. நம்பிக்கை அவசியம் என்று சொன்னேன். சிறுத்தொண்டர் தமது பிள்ளையை அறுத்துச் சமைத்துவிட்டார். அடியவர் பிள்ளையை அழைத்துவா என்றவுடன் அழைக்கப்போனார். அவர் அடியவரிடம் வைத்த நம்பிக்கையால் போனார். அதற்கேற்பப் பிள்ளையும் ஓடிவந்தார். தருமையாதீன முதற்குரவர் குருஞானசம்பந்தர் தமது ஆசாரியருக்கு விளக்கெடுத்துவந்தார், குரு வீட்டு வாசலில் நில் என்றார் அவர் வார்த்தையில் நம்பிக்கைவைத்து நின்றார். அன்றிரவு பெய்த மழை அவர் மீது படவில்லை. திரௌபதி கிருஷ்ணபரமாத்மாவை நம்பிய போது துகில் உரிய உரிய வளர்ந்துகொண்டே வந்தது எனவே எல்லாவற்றிற்கும் அடிப்படை மக்களுக்கு நம்பிக்கை வேண்டும்.

(தொடக்கவுரை அடுத்த இதழில் வெளிவரும்.)

எதிர்காலம் -திரு. கே. முத்துஜோதிடர்

(பராபவஞூ மாசிமீ 1உ முதல் 30உ முடிய)
(13—2—67 முதல் 14—3—67 முடிய)

1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி நட்சத்திரங்கள் 4 பாதங்களும், கார்த்திகை முதல் பாதமும் மிஸ்ரபலனைத்தரும். வரவு செலவு சமன் ஆகும். சதா அலைச்சலைத்தரும். உஷ்ண பீடையையும் காட்டும். ஜீவனத்தில் மாறுதல்கள் உண்டாகும். பரணி 4 பாதங்களும் விசேஷமான தனதான்ய லாபத்தைத் தரும். உலகப் பிரஸித்தியையும், கீர்த்தியையும் தரும். இல்லறசுகம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

2. ரிஷபம் - கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

ரிஷபராசி 9 பாதங்களும் விசேஷ நன்மைகளை உண்டு பண்ணும். ஜீவனலாபம் ஏற்படும். வியாபாரிகளானல் கிரய விக்ரயங்களில் விசேஷ லாபத்தையும் தரும். தெய்வ பலம் முன்னின்று காக்கும். நூதன கிரஹ லாபத்தையும் தரும். வெள்ளி, சனி சுபமாகும்.

3. மிதுனம் - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மேற்படி மிதுனராசியில் மிதுனராசி அமைந்த புனர்பூச நக்ஷத்திரம் 1, 2, 3 பாதங்கள் உள்ளவர்களுக்கு ஆரோக்கியக் குறைவும், எதிர்பாராத குடும்பச் சிரமங்களும், தன நஷ்டமும் உண்டுபண்ணும். மற்ற மிருகசீர்ஷம் 3, 4 பாதங்களும், திருவாதிரை பூராவும் விசேஷமான இராஜயோக பலனைத் தரும். தொழில் ஓங்கும். தனதான்யவிருத்தி ஏற்படும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். சனி, செவ்வாய் சுபமாகும்.

4. கடகம் - புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் 4 ஆம் பாதமும், ஆயில்யம் 4 பாதங்களும, ஜெயத்தை உண்டுபண்ணும். பரீட்சையில் மாணவன் ஆனல்

வெற்றி அடைவான். விவகாரம் ஜெயிக்கும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். பூசம் 4 பாதங்களும் சுபம் இராது. எந்தக் காரியமும் தவக்கப்படும். சோரபயம் உண்டுபண்ணும். வீண் அலைச்சலும் ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மேற்படிராசி 9 பாதங்களும் சுபமே ஆகும். எதிர்பாராத நன்மைகள் ஏற்படச்செய்யும். நஷ்டமான பொருளும், தொழிலும் வந்துசேரும். இடம் மாறுதலோடு ஜீவன லாபம் ஏற்படும். மாதக் கடைசி பத்துதினங்களில் சிற்சில கவலைகளையும், சஞ்சார பலனையும் தரும். ஸ்ரீ சனிபகவான் உபாசனையால் சகலமும் நன்மை ஆகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் தனக்கும், தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் விசேஷ நன்மைகளைத்தரும். நஷ்டமான பொருள்கள் கொஞ்சம் கொஞ்சமாய் வந்துசேரும். சதா சஞ்சாரபலனும், குருதேவதா பக்தியையும் தந்து உலகப் பிரசித்தியையும் தரும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். நூதன பிரபு தரிசனமும், கீர்த்திப்பத்திரமும் கிடைக்கச்செய்யும். விவகாரம் ஜெயிக்கும். தெய்வபலம் முன்நிற்கும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம் - சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

மேற்படி 9 பாதங்களும் இல்லற சுகபோகங்களைத்தந்து, தனதான்யப் பெருக்கையும் தரும். வெகுகாலமாய்த் தீராத விவகாரம் தீரும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். ஆரோக்கியத்தைத்தரும். உலகப் பிரசித்தியையும், கீர்த்தியையும் உண்டுபண்ணும். தெய்வபலம் பிரகாசிக்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை

விசாகம் 4 ஆம் பாதமும், அனுஷமும் துக்கசமாசாரத்தை உண்டுபண்ணும். மனம் சாந்தி அடையாமல் சதா கவலையாகவே இருக்கும். தனதான்ய நஷ்டமும், சத்ருவிருத்தியும் ஏற்படும். கேட்டை 4 பாதங்களும் சுபத்தைத்தரும். ஆரோக்கியம் உண்டு

பண்ணும். உத்தியோக உயர்வு ஏற்படும். தெய்வபலம் காக்கும் வியாழன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுசு 9 பாதங்களும் மிஸ்ரபலனைத்தரும். வரவு செலவு சமன் ஆகும். புத்திராதிகளால் நன்மை உண்டுபண்ணும். நூதனமான தொழில் முறைகள் ஏற்படும். ஸ்தாவரஜங்கம சொத்துக்கள் சேரும். ஞாயிறு, புதன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி பூராவும் இராஜயோக பலனைத்தரும். எதிலும் வெற்றி உண்டாகும். தொழில் ஏற்றமும், கீர்த்திப்பத்திரமும் கிடைக்கச்செய்யும். குடும்பம் ஓங்கும். மேலோர் பெரியோர் களின் அன்பு ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½. சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி பலன் பூராவும் மிச்சிரமாகவே நடக்கும். வீண் செலவுகளும், மனக்கிலேசங்களும் உண்டுபண்ணும். ஜீவன லாபம், தொழில் ஏற்றம், பெரியோர் அன்பு, தெய்வபலம் எல்லாம் பிரகாசிக்கும். திங்கள், புதன் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ½ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் செலவினங்களோடு சந்தோஷத்தை உண்டுபண்ணும். உத்தியோக உயர்வும், தொழில் ஏற்றமும் ஏற்படச்செய்யும். மத்தியில் ஆரோக்கிய குறைவைக் காட்டும். சதா சஞ்சலமாகவே இருந்துகொண்டு சகல காரியத்தையும் ஜெயிக்கச்செய்யும். புத்திராதிகளாலும், மேலோர்களாலும் நன்மை உண்டாகச்செய்யும். செவ்வாய், புதன் சுபமாகும்.

முக்கிய கவனிப்பு :- ஸ்ரீ மகாஜனங்களுக்கு வேண்டுகோள்: லோகரக்ஷகரான ஆயுஷ்காரக ஸ்ரீ சனீசுவரபகவான் நாளது மாசிமாதம் 26 ஆம் தேதி சுக்கிரவாரம் அமாவாசையன்று இரவு 49 - 51 நாழிகைக்கு மேற்கே அஸ்தமனத்தோடு கும்பராசியி லிருந்து மீனராசிக்குப் பிரவேசம் செய்கிறார். மறுதினம் சனிக் கிழமை புச்ச அமாவாசை பூரட்டாதி நக்ஷத்திரத்தில் சனிப்

பெயர்ச்சி புண்ணியகாலமாகையால் மேஷம், சிம்மம், கும்பம், மீனம் இந்த இராசியில் ஜனித்தவர்கள் ஸ்ரீபகவானைத் தரிசித்து அபிஷேகாதிகள் நடத்தி எள்ளன்னம், திலபாத்திரம், இறுப்புச் சட்டியில் நல்லெண்ணெய், நீலவஸ்திரம் முதலானதுகள் தானம் செய்துகொள்ள உத்தமம். ஜன்மதிரய நக்ஷத்திரமுள்ளவர்கள் சனி சாந்தி செய்வது நலம். 6, 8, 12, 1 இந்த இராசிகளில் பகவான் அமைந்தவர்கள். பிரதிமாதம் தானமும்கூட செய்வது உத்தமம்.

மேலும் உலக க்ஷேமத்தின் பொருட்டு எவ்வித ஆபத்துக்களும் பயமும் ஏற்படாமல் இருக்க ஆஸ்திக சஜ்ஜனங்கள் எந்த வித லௌகிகத்திலும் தலையிடாமல் சதாவும் ஸ்ரீ மகாகாளி, ஸ்ரீ சரபேசுவரர், ஸ்ரீ வீரபத்திரர் இவர்களைத் தியானம் செய்து கொண்டே இருக்க சுபமுண்டாகும்.

(180-ம் பக்கத் தொடர்ச்சி)

திருவாமூரில்

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் தேவாரப் பாடசாலை

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாமூர் ஸ்ரீ அப்பர்சுவாமிகள் அவதாரத் தலமாகிய திருவாமூரில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் தேவாரப் பாடசாலை நிரந்தரமாக நடத்துவதற்கு ஒருலக்ஷரூபாய் மூலதனம் அமைத்துள்ளார்கள். அதன்மூலம் 10—11—66 ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் ஜன்மநக்ஷத்திரத்தன்று தருமை ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் சந்நிதியில் தேவாரப் பாடசாலை தொடங்கப்பெற்றது. 23—11—66 மாலை திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் ஆலயத்தில் முறையாகத் தேவாரப் பாடசாலை தொடங்கப்பெற்றது. திருமுறைப்பண்மணி, திரு. T. M. சபாபதி தேவார ஆசிரியராக நியமனம் செய்யப்பெற்றுள்ளார்.